Registered as Newspaper பக்கங்கள் 06 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 22 (4·4·94) திங்கட்கிழமை ஓசை 45

## தொகுதிவாரி பிரதிநிதித்துவம்; அரசு தீவிர பரிசீலனை

தொகுதி வாரிப் பிரதிநிதித்துவ முறையை மீண்டும் அமுலுக்கு கொண்டு வருவது தொடர்பாக அரசாங்க உயர் மட்டங்களில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டவல்லுநர்கள் போன்றோரின் கருத்தை திரட்டுவதில் அரசாங்க வட்டாரங்கள் ஈடுபட்டிருப்பதாக கூறப்படுகிறது. சிரேஷ்ட அமைச்சர்கள் இருவரும், அதிகாரிகள் இருவரும் இது பற்றி தீவிரமாக ஆராய்ந்திருப்பதாகவும் தொகுதி வாரி பிரதிநிதித்துவம் மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் என்பவற்றின் சாதக, பாதகங்கள் பற்றி அண்மையில் நடத்தப்பட்ட தேர்தல் முடிவு (6 ஆம் பக்கம் பார்க்க)

# துன்பங்கள் மத்தியிலும் துணிவுடன் செயலாற்றிய கடமை வீரர்; பேராசிரியர் துரைராசாவிற்கு தேசியத் தலைவர் பாராட்டு

## விருது வழங்கிக் கௌரவிப்பு



''எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப் பற்றிநிற்கும் எமது மக்களுக்கு பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்துபோகாத உறுதிப்பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணமாக விளங்கினார்.''

இவ்வாறு தலைவர் வே. பிரபாகரன் நேற்று பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளும், பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

தேசப்பற்றுடன் செயற்பட்டு, கல்வித்துறையின் மேம்பாட்டிற்கு அவர் ஆற்றிய அரும்பணியை பாராட்டிய தலைவர், பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு விசேட விருது ஒன்றை வழங்கிக் கௌரவித்தார்.

தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையின் விபரம் வருமாறு:

சான்றோரைப் போற்றுவதும், கற்றோரை கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு, எமது சீரிய பண்பாடு.

இந்தப் பண்புக்கமைய பேராசிரியர் துரைராசா அவர்களை பாராட்டிக் கௌரவிப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தலை சிறந்த கல்விமான். உலகப் புகழீட்டிய அறிஞர். ஆறு ஆண்டுகளாக, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகப் பதவியிலிருந்து, அவர் எமது மண்ணுக்கு ஆற்றிய சேவை மகத்தானது அதற்காக ஈழத்தமிழ் உலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கும்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தேசப்பற்றாளர். அவர் இந்த மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தார். அவரது வாழ்க்கை இந்த மண்ணோடு பிணைந்தது, மக்களோடு இணைந்தது. அவர் இந்த மண்ணினதும், மக்களதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து நின்றார்- போராட்ட வாழ்வின் பளுக்களை சுமந்துகொண்டார். போராடும் மக்களின் துன்பங்களை பகிர்ந்து கொண்டார்.

எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும், எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப் பற்றிநிற்கும் எமது மக்களுக்கு பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்துபோகாத (6ஆம் பக்கம் பார்க்க)

# ஏப்ரலில் மேலும் ஒரு தொகுதி ஆயுதங்கள் கொழும்பு வரும்

(கொழும்பு)

## பிரிகேடியர்விஜயசேகராவை ராணுவமன்று விசாரிக்கும்?

(கொழும்பு)

ஓய்வுபெற்ற பிரிகேடியர் தயா விஜயசேகரா என்பவர் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக தினகரன் செய்தி வெளியிட்டுள்ளது.

பதவியிலிருந்தபோது வட பகுதிக்கு எடுத்துச்செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்த பொருள்களை எடுத்துச் செல்ல வழிவகை செய்ததன் மூலம் பதவி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு இராணுவ நீதிமன்றில் இவர் விசாரிக்கப்படவுள்ளார்.

பதவியிலிருந்தபோது வட பகுதிக்கு எடுத்துச்செல்ல ... ஞுவ நீதிமன்றில் இவர் விசாரிக்கப்படவுள்ளார்.

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் கொள்வனவு செய்த பெருந்தொகை ஆயுதங்கள் இம்மாத இறுதிக்குள் வந்து சேரும் என கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. ஏற்கனவே கொள்வனவு செய்த 500 கோடி ரூபா ஆயுதங்கள் வந்து சேர்ந்துவிட்டதாகவும், மேலும் 115 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் இம்மாத இறுதிக்குள் வந்துசேரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை பெரும் ஆயுதக் கொள்வனவு செய்வதற்கென சிறிலங்காவின் படைத்துறை அதிகாரிகள் பல குழுக்களாக வெளிநாடு சென்றுள்ளனர். இக்குழுக்களின் சில ஆயுதக் கொள்வனவு தொடர்பாக கைச்சாத்திடவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை ரஷ்யாவில் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று எம். ஐ' 17 ரக உலங்கு வானூர்திகள் இம்மாத நடுப் பகுதியில் கொழும்பு வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதன் பெறுமதி 4.5 மில்லியன் டாலர் ஆகும்.

இதேசமயம் அண்மையில் செய்யப்பட்ட ஆயுதக்கொள்வனவு தொடர்பாக அதிகாரிகள் மட்டத்தில் பலத்த அதிருப்தி நிலவுகின்றது. நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய நவீனரக டாங்கிகள் விற்பனைக்கு வந்துள்ள இன்றைய நிலையில், பழைய டாங்கிகளை கொள்வனவு செய்தது குறித்தும் அதிகாரிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

என்ன எதிர்ப்புகள் இருந்த போதும் இம்மாத இறுதிக்குள் அனைத்து ஆயுதங்களும் இங்கு வந்து சேர்வது உறுதி என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஜனாதிபதி வேட்பாளராக ரணிலை நிறுத்த முயற்சி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக தெரிவு செய்யும் பொருட்டு கட்சி ஒருமித்த முடிவு எடுப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள கட்சி மகாநாட்டில் இம்முடிவை எடுப்பதற்கான பிரசார நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்கா, சிறிசேனகுரே, வீரசிங்க

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஐ. தே. கவிற்குள் இழுபறி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதிக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த வேட்பாளர் யார் என்பது குறித்து பலத்த இழுபறி நிலை அக்கட்சியினுள் எழுந்துள்ளது. இக்கட்சியின் வேட்பாளராக ஏற்கனவே தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவு செய்யப்பட்டிருப்பினும் தென் மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து டி. பி. விஜேதுங்கா மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலமாகவே கட்சிக்குள் எழுந்துள்ளது. இவ் விவகாரமானது இன்றும், நாளையும் இடம்பெறவுள்ள செயற்குழு கூட்டத்தில் பூதாகரமாக வெடிக்கலாம் எனக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் டி. பி. விஜேதுங்கா இல்லாது புதியவேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனக் கோருபவர்கள் டி. பி. விஜேதுங்காவின் நடவடிக்கைகளும் பேச்சுக்களுமே தென்மாகாண சபையில் கட்சியின் தோல்விக்குக் காரணம் எனத் தெரிவிக்கின்றனர். டி. பி. விஜேதுங்கா தனது பேச்சுக்களின் மூலம் சிறுபான்மையினரை பகைத்துக் கொண்டுள்ளார் எனவும் சிறுபான்மையினர் வாக்குகள் இன்றி தேர்தலில் வெற்றிபெற முடியாது எனவும் சுட்டிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பெரும் கைகலப்பில் முடிந்த உதைபந்தாட்டப் போட்டி

நேற்றைய தினம் புனிதபத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டபோட்டியில் பெரும் கைகலப்பு ஏற்பட்டது.

புனித யாகப்பர் தேவாலய கட்டட நிதிக்காக பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று மாலை புனிதபத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்ற நேரத்தில் பாடும்மீன் கழக வீரனுக்கும் ஞானமுருகன் கழக வீரனுக்கும் ஏற்பட்ட கைகலப்பினால் நடுவர் அவ்விருவரையும் வெளியேற்ற முற்பட்ட போது பாடும்மீன் கழக ஏனைய வீரர்களாலும் ஆதரவாளர்களாலும் ஞானமுருகன் விளையாட்டுக் கழக வீரர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். தடிகள், கற்கள் கொண்டு தாக்கியதில் ஞான

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சுபமங்களா ஆசிரியர் யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தின் பிரபல எழுத்தாளரும், நாடகாசிரியரும், பிரபல இலக்கிய ஏடான 'சுபமங்களா' சஞ்சிகையின் ஆசிரியருமான கோமல் சுவாமிநாதன் மூன்று நாள் இலக்கியப் பயணமாக நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அவர் இன்று காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடம் ஏற்பாடு செய்துள்ள நாடகப்பட்டறை யொன்றில் கலைஞர்களைச் சந்தித்து உரையாடுவார். இந் நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைப்பீட தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமைதாங்குவார். மாலை மூன்று மணிக்கு தேசிய கலை இலக்கிய பேரவையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் மன்றமும் ஏற்பாடு செய்துள்ள பொது வரவேற்பில் "தமிழ் இலக்கியத்தின் நிகழ்வுகளும் தாக்கங்களும்" என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார். இந் நிகழ்வின்போது க. தணிகாசலம் வரவேற்புரையும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தொடக்கவுரை நிகழ்த்துவார். நாளை காலை விடுத

(6ஆம் பக்கம் பார்க்க)

# அகதிமுகாமில் தீ விபத்து; ஒருவர் கொல்லப்பட்டார்

(புத்தளம்)

புத்தளம் - மன்னார் வீதியிலுள்ள அகதிமுகாமில் இடம்பெற்ற தீவிபத்தின் காரணமாக ஒருவர் கொல்லப்பட்டார். அங்குள்ள 186 தற்காலிக வீடுகளில் 183 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. ஏறத்தாழ 1200 அகதிகள் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் கருத்து வெளியிடுகையில், குடிசையொன்றிற்குள் இருந்த நெருப்பின் காரணமாகவே இந்த திவிபத்து ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

க. பொ. த. சாதாரண பரீட்சை

# யாழ்ப்பாண முடிவுகள் இவ்வாரஇறுதியில் வரலாம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கொழும்பில் வெளியாகிய க. பொ. த சாதாரண தரப் பரீட்சையின் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இவ்வார இறுதி நாட்களில் யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பெறுபேறுகளை தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் எடுத்துவருவார் என எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இப்பெறுபேறுகள் கடந்த 30ஆம் திகதி கொழும்பில் வெளியான போதிலும் போக்குவரத்து சீர்கேட்டினால் இதுவரை யாழ். எடுத்துவரப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி)(பா)

# தென்மாகாணசபை தேர்தல் முடிவு ஐ. தே. கவிற்கு அபாய அறிவிப்பு

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா

தென்மாகாணசபைத் தேர்தல் முடிவு ஐ. தே. கவுக்கு விடுக்கப்பட்ட ஓர் அபாய அறிவிப்பு (றெட் நோட்டீஸ்) என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

இந்த அபாய அறிவிப்பை ஒரு முன் எச்சரிக்கையாக வைத்து கட்சியை சீரமைக்கவுள்ளோம். கட்சியின் சீரமைப்புக்குழு இதுபற்றி இப்போது ஆராய்கிறது. ஜனாதிபதியும் தனது ஆலோசனைகளை இந்த குழுவுக்கு வழங்குவார் என்றும் அவர் கூறினார். ஐ. தே. க தலைமைக் காரியாலயமான சிறிகொத்தா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் உரையாற்றினார்.

தென் மாகாணசபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றதால் தென் மாகாண சபைத் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெற்றதாக சுதந்திரக்கட்சி கூறுகிறது. எமது கட்சி ஓர் இராணுவம் போன்றது தோல்வியைக்கண்டு நின்றுவிடாது தொடர்ந்து முன்னேறுவோம் கட்சியில் உள்ள குறைகளைக் களைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றில் நாமே வெற்றியடைவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

### தேவை

சகலவிதமான வீடியோ செற், ரேப் செற் வகைகள், வமசி, கமறா மற்றும் எலெக்றோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வனம் இல. 8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இ-8985)

### ஜவேரி

சீயாக்காய்ப் பவுடர்

மக்கள்நலனுக்கு இயற்கை அளித்த சீதனமாகிய ஆறுவகை இயற்கைப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது: ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும் தயாரிப்பாளர் கந்தசாமி அன் சன்ஸ், 15 ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம். (7899)

### விற்பனைக்கு

பொமரேனியன் 2½ மாத ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு:- K- வரதன், 82/4 A, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்- (7930)

### வீடு விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு கனகம் புளியடி சந்தி வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு தொடர்பு ஸ்ரீ விஸ்ணு முகவர் பிரதான வீதி, சாவகச்சேரி. (5092)


# மீனவர் நிவாரணம் குறித்து இன்னமும் தெளிவற்ற நிலை

(யாழ்ப்பாணம்)

பாதிப்படைந்த மீனவர்களுக்கான நிவாரணத்தை அரசாங்கம் தொடர்ந்து வழங்குமா? இல்லையா? என்பது பற்றிய தெளிவான விளக்கம் எதுவும் இல்லாமல் மீனவர்கள் குழப்பமடைந்துள்ளனர்,

சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் இதுபற்றிய தெளிவான செய்தி கூறாமல் மீனவர்களை தடுமாற வைக்கின்றனர் என்று புகார் தெரிவிக்கப்பட்டது.

கடந்த தை மாதத்திற்குப் பின்னர் பாதிப்படைந்த மீனவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சிடமிருந்து மீனவர் நிவாரண கொடுப்பனவு பற்றிய செய்தி எதுவும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ் அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து வரும்போதே மீனவர் நிவாரண கொடுப்பனவு பற்றிய தெளிவான செய்தியைப் பெற்று வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டது, (தி),(பா)

### கண்டெடுப்பு

கணேஷ் தவராஜன், அருணாசலம் அனுஷாதேவி ஆகியோர்களது கடவுச்சீட்டுகளும் நாகன் சுந்தப்பு என்பவரது அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள்வந்து பெற்றுக் கொள்ளவும்.

# பாடசாலை வேலைப்பகுதி ஊழியரை விடுவிக்குக

(நல்லூர்)

கல்வித் திணைக்களத்தில் இதுவரை காலமும் சேவையாற்றிய பாடசாலை வேலைப் பகுதி உத்தியோகத்தர்களை உடனடியாக விடுவிக்கும்படி வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு கல்விப் பணிப்பாளர்களையும், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்களை மாகாண அமைச்சின்கீழ் இயங்கும் பொறியியல் சேவைகள் திணைக்களத்துக்கு மாற்றுவதற்காகவே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

பாடசாலை வேலைப் பகுதியைச் சேர்ந்த எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரே பொறியியல் சேவைகள் திணைக்களத்திற்குத் திடீர் மாற்றம் பெறவுள்ளனர். இந்த உத்தியோகத்தரின் விபரங்களையும் மாகாண அமைச்சு கேட்டுள்ளது. அதிகாரப் பரவலாக்கல் நடைமுறையைத் தொடர்ந்தே இந்த இடமாற்றங்கள் செய்யப்படுகின்றன எனத் தெரியவருகிறது.

### விஞ்ஞான விவசாய பீடங்கள்

# கிழக்கு பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பம்

கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி மூடப்பட்ட கிழக்கு பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட விருப்பதாக உபவேந்தர்பேராசிரியர் எஸ். சந்தானம் தெரிவித்தார்.

இம்முடிவு குறித்த வடபகுதியிலுள்ள மாணவர்களுக்கு தகவல் அனுப்ப ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கையை அடுத்து மாணவர்கள் விரிவுரைகளை பகிஷ்கரித்ததனால் கடந்த பெப்ரவரி 3ஆம் திகதி வந்தவாறு மூலையில் இயங்கும்விவசாய, விஞ்ஞான பீடங்கள் மூடப்பட்டன.

ஒன்றரைமாதகாலத்தின்பின் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினரை சந்தித்துப் பேசியதையடுத்து இரு பீடங்களையும் மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது. பேச்சு நடத்திய மாணவர் குழுவிடம் பல்கலைக்கழக ஒழுங்கு விதிகள் தொடர்பாக சிலநிபந்தனைகள் முன்வைக்கப்பட்டதாகவும்இந்நிபந்தனைகளை மாணவர்கள் ஏற்றுள்ளதாகவும் உபவேந்தர் தெரிவித்தார் மாணவர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து பல்கலைக்கழக அதிகாரிகள் குழு ஒன்று கூடி ஆலோசனை நடத்திய பின்னர் எதிர்வரும் 18ஆம் திகதி இருபீடங்களையும் மீண்டும் திறக்க தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை ஒழுங்கு விதிகளை கடுமையாக மீறிய குற்றச்சாட்டின் பேரில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் இருவர் மூன்று மாத காலத்திற்கு விரிவுரைகளுக்கு சமுகமளிக்க முடியாதென தடைவிதிக்கப்பட்டுள்ளது ஒழுங்கு விதிகளை மீறிய மாணவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை ஆட்சேபித்து ஏனைய மாணவர்கள் எத்தகைய நடவடிக்கைகளிலும் இறங்குதல் கூடாது என பல்கலைக்கழக அதிகாரிகள் மாணவர்களுடனான சந்திப்பில் வலியுறுத்திக் கூறியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, வர்த்தக பீடங்கள் இடையூறு இன்றி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன

# சைக்கிள் திருடன் வசமாக சிக்கினான்

(யாழ்பாணம்)

சைக்கிளைத் திருடிச் சென்றவர் அதன் உரிமையாளரால் மடக்கப்பட்டார். கடந்த வெள்ளிக்கிழமை நாவலர்வீதி 4ம் சந்திப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இப்பகுதியைச் சேர்ந்த கனகையா என்பவரதுசைக்கிளை திருடிய வயோதிபர் ஒருவர் அதனை ஓடிச்செல்ல முற்பட்டபோது உரிமையாளர் பின்தொடர்ந்ததை அடுத்து அவ்வயோதிபர் சைக்கிளை ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில் கடை யொன்றின் முன்னால் நிறுத்திவிட்டு ஓட்டமும் நடையுமாக தப்பியோட முற்பட்டாராம் ஆயினும் சைக்கிள் உரிமையாளர் இளைஞரின் உதவியுடன் திருடனை மடக்கிப்பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளாராம் (22)

# ஐ.ஐ. தே. மு மீள புனரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை புனரமைக்க அதன்தலைவர்கள் இப்போது நடவடிக்கை எடுத்துள்ளனர்

இதுகுறித்து கட்சியின் தலைமைக்குழு கூடி ஆராயுமென அதன் பொதுசெயலாளர் ஜி எம் பிரேமசந்திரா தெரிவித்துள்ளார்

இதைத் தொடர்ந்து கட்சியின் மாநாடு குருநாகலையில் கூட்டப்படும் பெரும்பாலும் இம்மாத இறுதியில்இம் மாநாட்டைக் கூட்டிக் கட்சிக் கிளைகளை வலுப்படுத்த அக் கட்சியின் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது.

# செயன்முறை பரீட்சை

(வடமராட்சி)

பருத்தித்துறை கோட்டப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் ஆண்டு-6 தொடக்கம் ஆண்டு - 11 வரையிலான மாணவர்களுக்கு விஞ்ஞான செய்முறைப் பரீட்சைகள் நடைபெற்று வருவதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வே. இ. செல்வரட்ணம் தெரிவித்தார். (யோ)

### பரிசளிப்பு விழா

பளை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா எதிர்வரும் புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

### நிர்வாகிகள் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது, இதில் நடப்பாண்டுக்குரிய தலைவராக திரு. இ. ஜெயக்குமாரும், செயலாளராக திரு. த. சபாநாயகமும், பொருளாளராக செல்வன் இ. ஜெயபாலன் உட்பட 23 நிர்வாக சபைஉறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### சிசு கொலை

(வடமராட்சி)

தான் பெற்ற சிசுவை தன் கையால் கழுத்தை தாய் நெரித்துக் கொலை செய்த சம்பவம் ஒன்று புலோலி தெற்கு மந்திகைப் பகுதியில் நடைபெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக

# இந்தியாவின் நடவடிக்கையாவும் கழுத்தை பிடித்து வெளியேதள்ளியது

(வடமராட்சி)

இந்திய அரசின் ஒவ்வொரு நடைமுறைகளும் எமது கழுத்தைப் பிடித்து வெளியேறு என்று சொல்வது போன்று ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

இவ்வாறு இந்தியா சென்று இரண்டாவது கட்டமாக திரும்பி வந்தவர்களில் ஒருவரான சே. தேவராசா என்ற குடும்பஸ்தர் ஈழநாதம் மக்கள் தினசரிக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது இந்தியாவில் நாங்கள் தங்கியிருந்த காலப்பகுதியில்பயப்பீதியுடனேயே 'வாழ்ந்தோம்' அங்கே என்ன ஆபத்தான சம்பவம் நடந்தாலும் இலங்கைத் தமிழர் மீதே சந்தேகிப்பர் நாங்கள் அடிக்கடி விசாரணை செய்யப்படுவோம். சில சமயங்களில் எம்மீது துன்புறுத்தல் செய்வார்கள்.

எங்களுக்கு பகிமாற போதிய உணவுகள் கிடைப்பதில்லை குறிப்பிட்டளவே சாப்பாட்டுக்கான பணம் கிடைக்கும். வெளிவேலைக்கு நாங்கள் செல்வோம் அதுவும் அவர்களின் அனுமதி பெற்றே செல்லவேண்டும் ஒரு மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டங்களுக்குச் செல்லக் கூடாதென கட்டாயமாக பணிக்கப்படும்.

எங்கள்பிள்ளைகளுக்குநல்ல கல்வி அறிவு கிடைப்பதில்லை எமது பிள்ளைகள் நல்ல கல்வி அறிவு இல்லாமல் தமது வாழ்க்கையை வீணடித்தனர். எம்மீது இந்திய அரசின் கெடுபிடியினாலும் பிள்ளைகளின் எதிர்கால கல்வியைக் கருத்திற்கொண்டும் நாங்கள்எமது சொந்த மண்ணுக்கு திரும்பினோம்.

எங்குதான் பொருள் பணம் செல்வங்களோடு வாழ்ந்தாலும் எமது மண்ணில் எமது இனத்துடன் சேர்ந்து வாழ்வது போல திருப்தி ஏற்படமாட்டாது என்றார். (யோ)

# பேசாலை அகதி முகாமில் பல இளைஞர் கைது

மன்னார் தீவில் பல பகுதிகளும் சிறிலங்கா இராணுவத்தினரால் அடிக்கடி சுற்றி

கைதுசெய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டு

## பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மணிவிழா ஒழுங்குகள்

## நினைவு கூருகின்றோம்...

## 1994-04-04

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய

ரகசன்

1987ஆம் ஆண்டு கிளி - வட்டக்கச்சிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த,

**கனியூட்** (அந்தோனி தேவராசா - முதலைக்குத்தி, உயிலங்குளம் - மன்னார்)

1989ஆம் ஆண்டு மன்னார் - வெள்ளாங்குளம் பாலியாற்றுப் பகுதியில் சிற்றூர்தி ஒன்றினை வழிமடக்கி கொள்ளையில் ஈடுபட்ட தேசவிரோத சக்திகளினால் காட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த,

**ராஜ்துயின்** (யோசப் அன்ரன் பெர்ணாண்டோ - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

1991ஆம் ஆண்டு காரை நகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில்வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். இளங்கோ** (இராமநாதன் சகாதேவன் - சரப்பல்தீவு - திருமலை)

மன்னார் - நானாட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். மார்க்குகன்** (ஆரோக்கியம் நிக்சன் - நானாட்டான் - மன்னார்)

**கொலிடின்** (பா. கிட்ணறி பிறேம்ராஜ் - நறுவிலிக

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை காவல்துறையினர் புலன்விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

(வோ)

## கண்டெடுப்பு

கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் ப. உதயா என்பவரால் கண்டெடுக்கப்பட்ட பெண்களுக்கான கைப்பையொன்று அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## 2ஆம் வருட பல்கலை மாணவருக்கு...

யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட அரசறிவியல், பொருளியல், சமூகவியல், சிறப்புக்கலை மாணவர்களுக்கும் மற்றும் வர்த்தக முகாமைத்துவ மாணவர்களுக்கான புள்ளிவிபரவியல் பாடத்தின் வெளிக்கள ஆய்வு பற்றிய (Field Report) கலந்துரையாடல் இன்று காலை 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் என 2ஆம் வருட மாணவ பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பல். மாணவரவை

(சி-9006)

---

பேராசிரியர் ஆ. துரைராசா அவர்களின் மணிவிழாவை சிறந்த முறையில் நடாத்தும் பொருட்டு பின்வருவோரைக் கொண்ட மணிவிழா செயற்பாட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

1 ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனமுதல்வர்)
2 சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)
3 மகாராஜ ஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள்
(மாவை ஆதீன முதல்வர்)
4 வணபிதா இமானுவல் அடிகளார்
5 அதிவணக்கத்திற்குரிய கலாநிதி ஜெபநேசன்
(யாழ் மேற்றிராணியார்)
6 அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர்
திரு இ. ஜெயராஜ் அவர்கள்
7 திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கள்
(அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்)
8 பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர்/யாழ்பல்கலைக்கழகஆசிரியர்சங்கம்)
9 திரு ச. க. தனேந்திரன்
(தலைவர் / யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம்)
10 திரு இ. எமில்
(தலைவர் /யாழ் பல்கலைக்கழக மாணவர்பேரவை)
11 திரு க. தேவராஜா
(பொருளாளர்/ யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்)
12 திரு க. வை. சற்குணம்
(சிற்றிசன் யாழ்ப்பாணம்)
13 திரு இ. அழகரத்தினம்
(நியூரோன் எலெக்ரிக்கல்ஸ், யாழ்ப்பாணம்)
14 திரு க. சோமசேகரம்
(மகாராணி பிடவை மாளிகை, யாழ்ப்பாணம்)
15 கலாசூரி என். கே. பத்மநாதன்
(நாதஸ்வரமேதை)
16 திரு. பொன். சுந்தரலிங்கம்
(சங்கீதபூசணம்)

மேற்படி குழுவின் கூட்டமொன்று நல்லை ஆதீன மகா மண்டபத்தில் மிக விரைவில் கூட்டப்பட இருக்கின்றது அதற்கான திகதியும் நேரமும் உறுப்பினர்களுக்குத் தனித்தனியாக அறியத்தரப்படும்

மணி விழாக்குழு சார்பாக

| | |
|---|---|
| ச. க. தனேந்திரன் | இ. ஜெயராஜ் |
| தலைவர் | அமைப்பாளர் |
| யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் | அகில இலங்கை கம்பன் கழகம் |

(சி-9005)

---

வளைக்கப்பட்டு பல பொது மக்கள் கைதுசெய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பேசாலைப் பகுதியில் அமைந்துள்ள அகதி முகாமிற்குள் புகுந்த இராணுவத்தினர் அங்கு தங்கியிருந்த பல இளைஞர்களைக் பல நாட்களாகியும் இதுவரை விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் அகதிமுகாம் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தினால் நிர்வகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது

# ஆயுர்வேத மருந்தாளர் பயிற்சி நெறி ஆரம்பம்

(வேலணை)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமை புரியும் மருந்தாளர்களுக்கான போதனா பயிற்சி நெறி ஒன்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடைபெற்றது.

திருகோணமலையில் உள்ள வடக்குகிழக்கு மாகாண அரசின் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் ஆயுர்வேத பணிப்பாளர் திரு மு உரோமகேஸ்வரனும் அவரது உதவியாளரான திரு. கிருஷ்ண பிள்ளையும் யாழ்ப்பாணம் வந்து இந்தபயிற்சி நெறியினை நடத்துவதற்கானஏற்பாடுகளை செய்திருந்தனர்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ் மாநகரசபையின் ஆணையாளர் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலா ஆகியோர் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 40க்கு மேற்பட்ட மருந்துக்கலவையாளர்கள் இப் பயிற்சியிற் பங்குகொண்டனர் (14)

# சிங்கள இலக்கியத்தைகாக்க இலங்கை வங்கி நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை வங்கி தற்போது சிங்கள இலக்கியத்தை பாதுகாக்கும் நோக்குடன் ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளதாக இலங்கை வங்கியின் 'இலங்கை வங்கி' செய்திகள் என்ற சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியின் சிங்கள சாகித்தியசங்கம் என அழைக்கப்படும் இவ் அமைப்பின் தலைவராக சதனபால கல்கொடியவும் செயலாளராக ஜீ வீரசிங்காவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஆலோசகராக இலங்கை வங்கி தலைவர் ஜொரான் கேகசீம்மும் இலங்கை வங்கி பொது முகாமையாளர் றோகினி நாணயக்காரவும் இருப்பதாகஅச்செய்திமேலும் தெரிவிக்கின்றது.

இதன் முக்கிய நோக்கமாக சிங்கள கலாசாரத்தையும் சாகித்திய மரபுகளையும் காப்பாற்ற தன்னால் இயன்ற நடவடிக்கையை வங்கி மேற்கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

குளம் - வங்காலை - மன்னார்)

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**சிறிகாந்** (சின்னையா உதயராசா - மாணிக்கவளவு ஓமந்தை - வவுனியா)

வவுனியா - பம்பைமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ஜியாப்காந்தன்** (குமாரசாமி மகேஸ்வரன் - 134 புகழேந்திநகர் - தணுக்காய்)

**2-ம் லெப். சியாந்தன்** (தெய்வேந்திரம் ரவிச்சந்திரன் - சாஸ்திரிகூழாங்குளம் - வவுனியா)

**விக்ரர்** (அம்பலவாணர் சுரேஸ்குமார் - இறம்பைக்குளம் - வவுனியா)

**பகலு** (அடைக்கலம் சுந்தரலிங்கம் - கண்டிவீதி, கின்னக்குளம் - வவுனியா)

**கிருபன்** (சு. ஜசமன் - பூவரசங்குளம்)

**தாமு** (பொன்னையா ஜெயராசா - விளக்குவைத்தகுளம் - வவுனியா)

**கபில்தேவ்** (முருகேசு சிவபாலன் - சாஸ்திரிகூழாங்குளம் - வவுனியா)

**சியாத்** (ப. பரமேஸ்வரன் - கோமியரகுளம் - வவுனியா)

**முகுந்தன்** (சுப்பையா சசிக்குமார் - உக்கிளாங்குளம் - வவுனியா)

**தனேந்திரன்** (சுப்பையா பன்னீர்செல்வம் - மாந்தை)

யாழ் - மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**தீபன்** (சுப்பிரமணியம் சுகந்தகுமார் - வட்டுக்கோட்டை கிழக்கு - யாழ்)

மட்டுநகரில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆதரவாளர்-

**பாலசுந்தரம்** (ரவீந்திரன் - நாவற்குடா - மட்டு)

1993ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் காவலரண் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். பெருந்தேவன்-மோகன்** (சேனாதிராசா குகதாசன் - சங்கிலியன் வீதி - நல்லூர்)

(இவருடைய பெயர் நேற்றைய நினைவு கூருகிறோம் பகுதியில் இடம்பெற்றமை தவறாகும்).

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

✵ இக்குறியிடப்பட்ட மாவீரர் சுரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(ஈ-9003)

# 3 மாதக் குழந்தைக்கும் தாயுடன் தடுப்புக் காவல்

(கொழும்பு)

மாத்தளையில் தங்கியிருந்த வெலிமாவட்டத்தைச் சேர்ந்தவரை பொலிசார் கைது செய்யும் நடவடிக்கையின் போது ஒரு தாயுடன் மூன்று மாதக் குழந்தையும் கைது செய்யப்பட்டு ஒரு நாள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது: கடந்த வாரம் அதிகாலை வெலிமாவட்டங்களில் இருந்து மாத்தளைக்கு வந்து தங்கியிருந்த ஏழு பேரும், நாவுந்தையில் தங்கியிருந்த ஏழு பேரும் மாகுல்சந்தையில் இரண்டு பேருமாக 16 பேர் கைது செய்யப்பட்டனர். மாத்தளையில் கைதானவர்களில் ஜெகதாம்பாள் என்ற பெண்ணும் ஒருவர்.

இவரும் இவரது கணவரும் மாத்தளையில் பிறந்தவர்கள். தற்போது மாத்தளையில் வியாபாரம்செய்து வருபவர்கள். அதிகாலையில் இவர்களது வீடும் பொலிசாரின் சோதனைக்கு உள்ளானது. ஜெகதாம்பாளின் அடையாள அட்டை கோரப்பட்டது. அடையாள அட்டையில் வதிவிடம் கூழாங்குளம் வவுனியா என பதியப்பட்டிருந்தது. 83 கலவரங்களின் போது இவர்கள் மாத்தளை பகுதியை விட்டு வவுனியா சென்றிருந்தனர். ஆனால் சிலகாலத்தின் பின் அங்கிருந்து திரும்பி மீண்டும் மாத்தளையிலேயே குடியேறினர்.

அப்போது பெறப்பட்ட அடையாள அட்டையில் முன்னர் குடியிருந்த வவுனியா பிரதேச விலாசம் பதியப்பட்டிருந்தது. ஆனால் இவர் மாத்தளையில் பிறந்தவர். இவரது குழந்தையும் மூன்று மாதங்களுக்கு முன் மாத்தளை ஆஸ்பத்திரியில் பிறந்தது.

அடையாள அட்டை காட்டப்பட்டதும் சம்பந்தப்பட்ட பெண் வவுனியாவில் முன்னர் வசித்ததால் அவரை விசாரணை செய்ய பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் எனக் கூறப்பட்டது. இதனால் இவரது மூன்றுமாதக் குழந்தையும் பொலிஸ்நிலையம் சென்றது. அங்கு தடுப்புக் காவலில் தாயும் மகளும் வைக்கப்பட்டனர். விசாரணையின் பின் மறுநாள்மாலையே இவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதுவரையில் மூன்று மாதக் குழந்தையும் தடுப்புக்காவலிலேயே இருந்தது.

## ஒட்சிசன் நிறுவனம் விழிப்புடன் செயற்படுகிறது

**- பணிப்பாளர் தகவல்**

(கொழும்பு)

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்கள் தொடர்ந்து இருப்பதன் காரணமாக இலங்கை ஒட்சிசன் நிறுவனம் விழிப்புடன் செயற்பட்டு வருகிறது என அதன் பணிப்பாளரும் நிர்வாக முகாமையாளருமான பீரிஸ் தெரிவித்தார்.

1987இல் ஒட்சிசன் சிலிண்டர் மூலம் தீவிரவாதிகள் நடத்திய வெடிச் சம்பவத்தில் மூன்று பேர் பலியாகினர், பலர் காயமடைந்தனர். இதற்குப் பின்னர் இங்கு தினமும் சிலிண்டர்களின் வால்வுகள் பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்கள் குறித்து படையினர் எமக்கு அடிக்கடி தகவல் தருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாஸ்போட் மோசடி பொலிசாரால் இருவர் கைது

(கொழும்பு)

பாஸ்போட் மோசடி நபர்கள் இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை புறக்கோட்டையில் வைத்து நெடுஞ்சாலை ரோந்துப் பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவரிடம் வெவ்வேறு பெயர்களில் 7 பாஸ்போர்ட்கள் காணப்பட்டன. ஆனால் ஏழிலும் ஒருவருடைய படங்களே ஒட்டப்பட்டிருந்தன. மற்றவர் இதே போன்று இரண்டு பாஸ்போர்ட்டுகளை வைத்திருந்தார். 9 பாஸ்போர்ட்டுகளையும் பறிமுதல் செய்ததுடன் இருவரையும் கைது செய்து கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்த போது நீதிவான் இருவரையும் இரு வாரங்களுக்கு விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டு மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## மேயருக்கு எதிராக நகரசபையில் தீர்மானம்

### குடிநீரில் குளோரின் இல்லையாம்

(கொழும்பு)

நுவரெலியா மாநகரசபையின் மேயர் திருமதி நளின்திலக்கா ஹேரத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை நுவரெலியா மாநகரசபை சுதந்திரக்கட்சி உறுப்பினர் தயானந்த றிபாய் கொண்டு வந்துள்ளார். இது தொடர்பான பிரேரணை மாநகரசபைச் செயலாளருக்கு அவரால் முன்அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒழுங்கான முறையில் தெரிவு செய்யப்பட்ட காரியக்குழு, செயற்குழுவை மாற்றியமை, மாநகரசபை மூலம் வழங்கும் குடிநீரில் கடந்த பல மாதங்களாக குளோரின் கலக்காமல் பாவனையாளருக்கு வழங்கியமை போன்ற எட்டுக் குற்றச்சாட்டுகள் மேயர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 10ஆம் திகதி மேயருக்கு எதிராக சுதந்திரப் பத்திரிகையாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கறுப்புக்கொடி பறக்கவிட்டு சுலோகங்களை ஏந்தி ஆர்ப்பாட்டம் ஒன்றை நுவரெலியாவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும். மேயராக இருந்த சமயம் பத்திரிகை சுதந்திரத்தை பறித்தமை சட்டவிரோத நடவடிக்கைக்காக தன் பதவியை பயன்படுத்தியமை ஆகிய காரணங்களை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

# பங்கீட்டட்டை பொருள் விநியோகத்தில் சிக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பங்கீட்டு அடிப்படையில் கூட்டுறவுச் சங்கம் மூலம் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களை வழங்குவதில் யாழ் திட்டமிடல் பிரிவினர் பல சிக்கல்களை எதிர்கொள்வதாக தெரிய வருகின்றது.

மேற்படி பொருட்களை விநியோகிப்பதற்கான பங்கீட்டு அட்டையின் தொகை அடிக்கடி மாற்றம் அடைவதினால் இந்த பிரச்சினையை திட்டமிடல் பிரிவினர் எதிர்கொள்வதாகவும், எனவே அனேகமாக மாதாந்தம் இத்தொகை பாரிய அளவில் அதிகரிப்பதாகவும் ஆகவே திட்டமிட்டு பொருள்கள் விநியோகம் செவ்வனே செய்ய முடியாமல் இருப்பதாக தெரிய வருகின்றது.

இந்த நிலைமையை போக்கும் முகமாக யாழ் மாவட்ட சகல பிரதேச செயலகங்களிடமும் அவ்வப் பகுதி பங்கீட்டு அட்டையை பலநோக்கு கூட்டுறவுச் சங்கரீதியாகவும் அ. இ. உ. அடிப்படையிலும் தந்துதவுமாறு திட்டமிடல் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரியவருகின்றது. (நி)

## இரண்டாம்தர பிரஜைகளாக தமிழர் நடத்தப்பட்டனர்

**பேராசிரியர் துரைராசா**

மட்டக்களப்பில் சிங்களவர் வசித்து வந்தனர், ஆங்கிலேயர் வருகையால் அவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டு அங்கு தமிழர்களை குடியேற்றினார்கள். இவ்வாறு வரலாறுகளில் இல்லாத விடயங்களை உண்மைக்குப் புறம்பான சம்பவங்களை சிங்கள கல்விமான்கள் இனதுவேஷத்தை தூண்டும் வகையில் சிங்கள மக்களிடையிலே கூறி வருகின்றனர் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் துணைவேந்தர் கௌரவிக்கப்பட்ட போதே அவர் அங்கு இக்கருத்தை கூறினார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் இலங்கை சுதந்திரமடைந்தும் தமிழர் இரண்டாம் தர பிரஜைகளாகவே நடத்தப்பட்டு வந்தனர். உரிமைகள் பறிக்கப்பட்டு அடிமை நிலைக்கு தள்ளுவதே பேரினவாதிகளின் நோக்கம். அதனை எதிர்த்து உரிமைக்காக- விடுதலைக்காக இன்று இப்போர் நடக்கிறது இந்த போராட்டகாலத்தில் பொருண்மிய அபிவிருத்திக்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயற்பட்டு வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சுதந்திரமானது பொருண்மிய சுதந்திரத்துடன்கூடியதாகவே அமைய வேண்டும்.

இந்த போராட்ட காலத்தில் எமது மக்களை வாழவைக்கவும் இங்குள்ள வளங்களை பயன்படுத்தி ஒரு சுயசார்பு பொருண்மியத்தை கட்டி எழுப்பவும் இவர்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற நான் ஆண்டவனை வேண்டுகின்றேன் என கூறினார்.

இந்நிகழ்வில் கல்விமான்களும் துறைசார் நிபுணர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வயோதிபர் தற்கொலை

(தொல்புரம்)

தொல்புரம் மத்திய பகுதியில் வயோதிபர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி தெரிய வருவதாவது; கடந்த வியாழக்கிழமை அதிகாலை வேளை தொல்புரம் மத்தியைச் சேர்ந்த சரவணை தம்பிமுத்து (வயது65) என்ற வயோதிபரே கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலைசெய்து கொண்டவராவார். (41)

## சுகாதார வைத்திய பிரிவுகளில் உண்மைக்கு புறம்பான தகவல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் சில சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிடுவதாக சமூக நலனில் அக்கறை கொண்ட சுகாதார அதிகாரிகள் தமது உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

இவர்கள் மேற்படி தகவலை தவறாக வெளியிடுவதினால் சில வைத்திய ஆய்வுகளை மேற்கொண்டு அதற்கான விரிவான நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் இருப்பதாகவும் இவர்கள் இலாபம் கருதி மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை சமுதாயத்தை [illegible] சுட்டிக்காட்டப்படுவதுடன் இதனை சீர் செய்யுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

சுமார் ஒன்றரை வருடத்திற்கு மேல் சனத்தொகை கொண்ட மேற்படி வைத்திய அதிகாரி பிரிவில் சென்ற வருடம் சமர்ப்பித்த அறிக்கையின் படி கலரா நோயினால் எவரும் தனது பகுதியில் பாதிக்கப்படவில்லை யென்றும் மலேரியா நோயின் தாக்கம் குறைந்து வருவதாகவும், தெரிவித்த கருத்தை மையமாக வைத்து மேற்படி தகவல் உண்மைக்கு புறம்பானது என்பதை சில வைத்தியப் பிரிவினர் தெரிவிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன


## பதவி வெற்றிடங்கள்

**01. பக்கம் கட்டுநர்**

(தினசரிப் பத்திரிகைப் பக்கங்கள் கட்டுவதில் அனுபவமுள்ளவர்களுக்கு வெற்றிடங்கள் உண்டு)

**02 ஒப்புநோக்குநர்**

(ஒப்புநோக்குநர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**04 04 1994 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில்வரவும்**

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

சகல வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கும், புகைப்பட துறையினருக்கும்

முக்கிய அறிவித்தல்

வெகுவாக பாதிப்பதாகவும் (நி)(க)

# கல்வி மேம்பாட்டு நிதிய வைப்பு விழா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த தமிழீழக் கல்வி மேம்பாட்டு நிதிய "வைப்பு விழா" எதிர்வரும் சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்- வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிதிய வைப்புவிழாவில் நிதி ஒப்படைக்க இருக்கும் சகல வர்த்தகர்கள், அரச சார்பு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபைகள் அன்றைய தினம் வைப்புச் செய்யுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (பா) (தி)

# கிராமசேவகர் வெற்றிடம்; நிரப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள கிராம சேவகர் பதவிகளுக்கு மிகவிரைவில் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து நேர் முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

அரசாங்க அதிபரின் சிபார்சுடன் இவர்களின் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் மாகாண அமைச்சின் பரிசீலனைக்காக இவர்களது சுயவிபரக் கோவை ஒன்று கோரப்படவுள்ளது (க)

# வாகரை பிரதேசசபைக்கு கூட்டம் நடத்த இடம் இல்லை

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற வாகரை பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவதற்கு இடமில்லாமல் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பிரதேசத்திற்கான பிரதேச செயலர் அலுவலகம் முன்பு தனியார் வீடு ஒன்றில் செயற்பட்டு வந்தது. தற்போது அவ்வீட்டில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து பிரதேச சபை செயலகம் வேறு ஒரு தனியார் வீட்டில் செயற்படும் போதும் அங்கு இடவசதி போதாமல் இருப்பதாக பிரதேச செயலர் கே. கதிர்காமநாதன் கூறியுள்ளார். இந்நிலையில் கூட்டம் நடத்துவதற்கே இடமில்லாமல் திண்டாட வேண்டிய நிலைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை வாகரைபிரதேச சபைக்கான கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டதளபாடங்களை எங்கே வைப்பது என்று தடுமாறும் அதிகாரிகள் அவற்றை வாழைச்சேனையில் வீதியோரத்தில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.


அப்பாடா என்னவெய்யில்....!
கொக்காகோலா இல்லாததன் அருமை.
இப்போது தான் தெரிகிறது.

கவலையை விடுங்கள்

இதோ உங்கள் கவலையைப் போக்க

)( பொய்கோலா )(

வந்து விட்டது

- உலகப்புகழ் பெற்ற கோலா சுவையோடு
- பொருத்தமாக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப முறையோடு
- உரிய அளவு காற்றூட்டத்தோடு
- சௌகரியமான விலையில் ...

பெற்றுக்கொள்ளுங்கள்

ஏக விநியோகஸ்தர்

வாமாஸ்

121/2 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8964)



யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீடியோப் படப்பிடிப்பாளர்களுக்கும், சகல புகைப்படத் துறையினருக்கும் 5-4-94 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் முக்கிய கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் இத்துறை சார்ந்த சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்,
கலை வட்டக இணையம்

(இ-9000)



# மலிவு விற்பனை

## புடைவை வகைகள்

மிகக் குறைக்கப்பட்ட விலைகளில்
பல வர்ணப் புடைவை வகைகளும்
தைத்த ஆடைகளும்

02. 04. 1994 முதல்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

13 04. 1994 புதன்கிழமை
ஈறாக ஞாயிற்றுக்கிழமை உட்பட
நாள்தோறும் காலை 7.00 மணி முதல்
மாலை 6. 00 மணி வரை
இம் மலிவு விற்பனை நடைபெறும்,

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி

புடைவை விற்பனை நிலையத்துக்கு
ஒரு முறை விஜயஞ் செய்து பாருங்கள்

அரிய சந்தர்ப்பம்.

பொது முகாமையாளர்
நல்லூர் ப நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

1994-4-08

(இ-9004)

# மாணவர் அரங்கு

## இரசாயனவியல்

### சடப்பொருட்கள்

உலகில் கணிதம், வானசாஸ்திரம் போன்றன பற்றிய எண்ணக் கருக்கள், நெடுங்காலமாக அறியப்பட்டாலும் சடப்பொருட்களைப் பிரித்தறிய விரும்பிய காலம் கி.பி. 1500-ம் ஆண்டு எனவே கூறலாம். கி.பி. 1600-ம் ஆண்டளவிலேயே போயில் என்பவர் கனஅளவிற்கும் அழுக்கத்திற்கு மிடையே ஒரு தொடர்பைக் கண்டறிந்தார். அமுக்கம் பற்றிய அறிவு கூட கி.பி. 1500-ம் ஆண்டிற்கு சற்று முன்னைய காலத்திலேயே வளரத் தொடங்கியது.

உண்மையில் சடப்பொருளைப் பிரித்தறிய விஞ்ஞானி முற்பட்டமை விஞ்ஞான வளர்ச்சியின் ஒரு முக்கிய திருப்புமுனையாகும்.

சடப்பொருளுக்கு மூன்று வெவ்வேறு நிலைகள் இருப்பதை விஞ்ஞானி அறிந்து கொண்டான்.

சடப்பொருள்கள் மூன்று வெவ்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. அவை பின்வருமாறு பெயரிடப்பட்டன; அவையாவன:

1. திண்மநிலை
2. திரவ நிலை
3. வாயு நிலை

வாயுநிலை எவ்வாறு உருவாகியிருக்கலாம் என ஆராயப்பட்டது. அது மிகச் சிறிய துணிக்கைகளாகக் காணப்படவேண்டும் என்ற சிந்தனை உருவாகியது. அத் துணிக்கைகளிற்கு இடையில் கவர்ச்சிவிசை இல்லாதிருக்கவேண்டும் என எண்ணப்பட்டது. இதனாலேயே வாயுத் துணிக்கைகள் எழுந்தவாறான இயக்கத்திற்குட்பட்டு அங்கும் இங்கும் அசைகின்றது எனக் கருதப்பட்டது.

ஆனால் திரவநிலை தோன்றியதிற்கான காரணத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருந்தன இங்கும் ஒரு குறிப்பிட்டளவு திரவத்தை மிக இலகுவாக பல பகுதிகளாகப் பிரிக்கக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் சிறிய சிறிய துணிக்கைகளினாலேயே திரவமும் உருவாகின்றது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. திரவநிலைக்கான காரணம் சிந்திக்கப்பட்டது.

இங்கு துணிக்கைகளிற்கு இடையில் கூடுதலான கவர்ச்சிவிசை இருக்கவேண்டும் எனவும் துணிக்கைகள் நெருங்கி இருப்பதாலேயே திரவநிலை உருவாகியிருக்கலாமெனவும் எண்ணப்பட்டது. திரவநிலையில் துணிக்கைகளிற்கிடையில் கவர்ச்சி விசை இருப்பதால் துணிக்கைகளிற்கிடையில் உள்ள தூரம் அதிகரிக்கப்படவில்லையாயினும் துணிக்கைகள் ஒன்றின்மேல் ஒன்று வழுக்கும் இயல்பு இருக்கின்றது எனத் தீர்மானிக்கப்பட்டது சிறிதளவேனும் இருப்பதில்லை. வாயுவை அமுக்கலாம் விரிக்கலாம்.

ஆனால் திரவத்தை எடுத்துக் கொண்டால் திரவத் துணிக்கைகள் பாத்திரத்தின் சுவரில் உஞற்றும் அமுக்கம் குறைவு பாத்திரத்தின் சுவர்களில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அமுக்கம் வழங்கப்படுகின்றது. அதன் மேல்மூடியில் திரவம் அமுக்கத்தை வழங்காது வாயு துணிக்கைகளின் வேகம் திரவத் துணிக்கைகளிலும் மிகவும் கூடுதலானது என்பதாலேயே வாயுத் துணிக்கைகள் கூடுதலான அமுக்கத்தை ஏற்படுத்துகின்றன: வாயுவினுள்ளே அல்லது திரவத்தினுள்ளே வெற்றிடம் ஒன்றை நிரந்தரமாக ஏற்படுத்த முடியாது. ஆனால் திண்மத்தினுள்ளே நிரந்தரமான வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தலாம் எனவே திண்மத்தினுள் அமுக்கம் என்று ஒன்று இருக்குமென எப்போதும் கூறமுடியாது.

எனவே மேற்கூறிய கருத்துக்கள் விஞ்ஞானிகளிற்கு பின்வரும் கருத்தை முன்வைத்தன:

பின்வரும் பரிசோதனைகள் வாயு, திரவம், திண்மம் மூன்றிலும் அசையும் தன்மையுள்ள தொடர்ச்சியற்ற துணிக்கைகள் உண்டு என்பதற்கு சான்றாக அமைகின்றன.

உதாரணமாக கிறிஸ் பூசப்பட்ட இரு தட்டுகளை ஒன்றின் மேல் ஒன்றை நகர்த்தலாம். ஆனால் அவ் இரு தட்டுகளையும் எதிர்த் திசையில் இழுக்க முடியாது.

இதனாலேயே திரவத்தை வேண்டிய வடிவத்திற்கு மாற்றக்கூடியதாக இருப்பதாக கருதப்பட்டது.

அப்போது திண்மங்கள் எவ்வாறு உருவாகியிருக்கலாம் எனச் சிந்திக்க வேண்டி இருந்தது.

திண்மங்களையும் உடைத்து சிறிய துண்டுகளாக்கலாம். எனவே திண்மங்களும் துணிக்கைகளால் ஆனது என்ற எண்ணம் உருவாகியது ஆனால் திண்மங்களை உடைத்தல் கடினம். எனவே திண்மத்தில் துணிக்கைகள் மிக வலிமையான கவர்ச்சி விசையினால் மிகவும் இறுக்கிப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு துணிக்கைகள் நெட்டாங்குஅசைவு குறுக்கு அசைவு எதற்குமே உட்படாதது. ஆனால் திரவத்தில் நீள்பக்க அசைவு இல்லாவிடினும் குறுக்கு அசைவு உண்டு.

வாயுக்கள் பரவும் தன்மையைக் கொண்டிருப்பதால் வாயுக்கள் அசையும் தகவுள்ள தொடர்ச்சியற்ற துணிக்கைகளைக் கொண்டுள்ளன வாயுக்கள் தம்மை அடைத்து வைத்திருக்கும் பாத்திரம் பூராவும் எழுந்தவாறு வேகமாகப் பரவும். மூடிய பாத்திரத்தின் எல்லாப் புள்ளிகளிலும் சம பெருமளவு அமுக்கத்தை உஞற்றும் சிறிதளவு துணிக்கைகளை அடைப்பதற்கு பெருமளவு பாத்திரம் தேவை மூலக்கூறுகளில்ஒழுங்கமைப்பு வாயுக்கள் தொடர்ச்சியற்றன தொடர்ந்து இயங்கும் துணிக்கைகளைக் கொண்டன என்பதற்கு ஆதாரம்

1. வாயுக்களின் மணம், நிறம் என்பன பரவுதல், வாயுக்கள், கலத்தல் வாயுக்கள் விரிதல், வாயுக்கள் அமுக்கப்படல் போன்றனவாகும்.

திரவத்துணிக்கை தொடர்ச்சியற்றன தொடர்ந்து இயங்கும் துணிக்கைகளைக் கொண்டன என்பதற்கு சான்றுகள்

திரவங்கள் ஒன்றுடன் ஒன்று கலத்தல் திரவங்கள் ஆவியாதல்

திரவமேற்பரப்பிலுள்ள நுண்ணியத்திண்மத் துணிக்கைகள் அங்கும் இங்கும் அசைதல் போன்றன இவற்றிற்கு சான்றாகும்;

திண்மத்திலுள்ள துணிக்கைகள் தொடர்ச்சியற்றவை தொடர்ச்சியாக அசைகின்றன சான்றுகள்

திண்மங்கள் ஒன்றுடன் ஒன்று இறுக்கமாக தொட்ட நிலையில் இருக்குமாயின் அவை ஒட்டிவிடுகின்றன. இதற்கான காரணம் திண்மங்கள் தொடுமேற்பரப்பில் ஒன்றோடொன்று கலத்தலாகும். அதாவது ஒரு திண்மத்தின் துணிக்கைகள் மற்றைய திண்மத்தினுள் அசைவதாகும்; உலோகத்தகடுகள் தொட்ட நிலையில் வைத்து மென்மையாக வெப்பமேற்றின் அவை ஒட்டி விடுகின்றன

திண்மங்கள் பகுதியாக உருகுதல் திண்மங்கள் பகுதியாக ஆவியாதல் துணிக்கைகள் அடைந்து திண்மமாக மாறுதல் திண்மங்கள் திரவங்களில் கலத்தல், கலப்புலோகம் உருவாதல் போன்றனவும் திண்மங்கள் தொடர்ச்சியற்ற இயங்கும் துணிக்கைகளைக் கொண்டன என்பதற்குச் சான்றாகும்

எனவே மேற்கூறிய பரிசோதனைகள், திண்மம், திரவம், வாயுவில் துணிக்கைகள் வெவ்வேறு அளவுகளில் அசைகின்றது என்பது அறியப்படுகின்றது.

வாயுத்துணிக்கைகள் பாத்திரம் பூராவும் அசையும், திரவத் துணிக்கைகள், திரவ ஊடாகவும் அசையும், திண்மத் துணிக்கைகள்

தா. நகரட்ணம் B. Sc (Cey)
(இரசாயன ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி)

ஓரிடத்தில் இருந்தவாறு அதிருகின்றது இதனாலேயே கனஅளவிலும், உருவத்திலும் மாற்றமேற்படுவதில்லை

திண்மத் துணிக்கைகள் திரவ ஊடகத்தினுள் அசைவதாலேயே திரவத்தின் கனஅளவிலும் மாற்றம் ஏற்படுவதில்லை ஆனால் உருவம் மாறும்.

வாயு உருவம் கனஅளவு இரண்டையும் மாற்றும் ஒரு குறித்த திணிவுடைய வாயுவின் கனஅளவு, அமுக்கம், வெப்பநிலை என்பவற்றால் நிர்ணயிக்கப்படும்.

ஆனால் திரவம், திண்மத்தின் கனஅளவை அமுக்கம் வெப்பநிலை பெரிதும் பாதிக்காது

திண்மத் துணிக்கைகள் நெருங்கி இருப்பதாலேயே வெப்பக்கடத்தும் திறன் உயர்வாக உள்ளது வாயுத்துணிக்கைகள் ஐதாகி இருப்பதாலேயே வெப்பக்கடத்துந் திறன் குறைவானது

ஆனாலும் திண்மம், திரவம் வாயு அவற்றின் திணிவை மாற்றுவதில்லை.

# வர்த்தகர்

## பொதியிடல் PACKAGING

### 1.0 அறிமுகம்

உற்பத்தி நிறுவனத்தால் கட்டுப்படுத்தக்கூடிய சந்தைக்காரணிகளாகிய உற்பத்திப் பொருள், விலை, இடம், மேம்படுத்தல் என்ற நான்கு காரணிகளையும் சந்தைப்படுத்தற் கலவை (MARKETING MIX) எனப்படும். இதனை "4P's" என அழைப்பர், பெரும்பாலான சந்தைப்படுத்துவோர் இவற்றுடன் ஐந்தாவது P யாக பொதியிடலை அழைக்கின்ற அளவுக்கு உற்பத்தித் தந்திரோபாயங்களில் ஒரு கூறாக அது அமைந்து விட்டது.

பொதியிடல் என்பதை நாம் "ஒரு உற்பத்திப்பொருளின்

### 2.0 பொதிவகைகள்

பொதி மூன்று மட்டங்களை உள்ளடக்கிய பொருட்களாக இருக்கலாம்-அந்த மூன்று மட்டங்களும்-

மூலப்பொதி
(PRIMARY PACKAGE)
இரண்டாந்தரப்பொதி
(SECONDARY PACKAGE)
கப்பலிடுகைப்பொதி)
(SHIPPING PACKAGE)

என அழைக்கப்படுகின்றன உற்பத்திப் பொருளின் உடனடியான கொள்கலனாக அமைவதே மூலப் பொதியாகும். ஒரு நெஸ்பிறேபால்மா அடைக்கப்பட்டிருக்கும் காற்றோசலிப்போ உட்புக முடியாத மினுக்கமான வெள்ளி நிற காகிதத்தாலாக்கப்பட்ட

காட்டாக "சிவப்பு விபர மூத்திரையிடப்பட்ட (RED LABEL) வாட்டபரீஸ் விட்டமின் கொம்பவுண்ட்" பெரியவர்கள் பாவிப்பது 'மஞ்சள் விபர மூத்திரையிடப்பட்ட வாட்டபரீஸ் விட்டமின் கொம்பவுண்ட்" சிறுவர்கள் பாவிப்பது என வேறுபடுத்தப்பட்டமைந்துள்ளது.

இந்த விபர மூத்திரைகள் கூட

இனங்காணும் விபர மூத்திரைகள்
(IDENTIFICATION LABELS)
தரங் காணும் விபர முத்திரைகள்
(GRADE LABELS)
விளக்கமளிக்கும் விபரமுத்திரைகள்
(DESCRIPTIVE LABELS)
மேம்படுத்தல் விபர முத்திரைகள்
(PROMOTIONAL LABELS)

பாவனை முறையை பொதியிடல் வழங்கியமைக்காகவும், அதன் கலைநயமான வடிவமைப்புக்காகவும், அவ்வாறு பொதியிடப்பட்ட பொருட்களை வாங்குவது கௌரவமானது என நுகர்வோர் கருதுவதாலும் பொருளின் உண்மை விலையைவிட சிறிது கூடுதலாக கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். இது பொதியிடலையும் அதுதொடர்பான நுட்பங்களையும், பொதியிடல் தொழில்துறைகளையும் வளர்ப்பதில் செல்வாக்குச் செலுத்துகிறது

### 3 3 குறியிடல் பிரதிமை (Brand Image)

சிறந்தமுறையில் பொதியிடன் போட்டியில் தோல்வியைத் தழுவிவிடுகின்றது. எனவே பொதியிடலை மேற்கொள்ளும்போது அது ஒருங்கமைப்பு அதிகார அமைப்புக்களாலோ, உற்பத்தியாளர்கள் தாமாகவோ, அல்லது பொதியிடற் பொருள் வழங்குநர்களாலோ தனியே தீர்மானிக்கக்கூடியதல்ல ஒரு குறிப்பிட்ட நுகர்வோர் குழுவினரைக் கொண்ட ஒரு குறிப்பிட்ட சந்தையில் ஒரு குறிப்பிட்ட பொருளிற்கான மிகப் பொருத்தமான பொதியிடல் முறையினை அப்பொருளிற்குப் பொறுப்பாகவுள்ள சந்தைப்படுத்தல் முகாமையே கட்டாயமாக நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு ஒரு சிறந்த பொதியிடலின் பின்வரும் சிறப்பம்சங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அ] கவர்ச்சி
ஆ) எடுத்துச் செல்வதில்

கின்ற மிகப்பெரிய நலனைப் பொதியிடல் கொண்டுள்ளது எடுத்துக்காட்டாக லெரண்டலைற் சவர்க்காரத்தின் மேலுறையில் மிருகக்கொழுப்பு எதுவும் பயன்படுத்தப்படவில்லை என்பதையும், நுளம்புத்திரிப் பெட்டிகளில் பைனமின் ஃபோட்டே Pynamin Forte) என்ற மூலப்பொருள் எத்தனை வீதம் சேர்க்கப்பட்டுள்ளது என்ற விபரங்களையும் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம்.

இலங்கையில் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி பொதியிடலில் சில தகவல்கள் கட்டாயமாக பாவனையாளருக்கு வெளிப்படுத்தப்படவேண்டும்என கட்டுப்பாடு காணப்படுகின்றது சிகரட் பொதிகளில் "புகைபிடிப்பதுஉடல்நலனுக்கு தீங்கானது" என்பதும், "பிள்ளைகளிடமிருந்தும் உணவுப் பொருட்களிலிருந்தும் விலக்கிவைக்கவும்"

நுட்பங்களினால் குளிரிடல் தேவைப்படும் பொருட்கள் அவற்றுக்கேற்ற கொள்கலன்களில் (Paper-Sealed Containers) பொதியிடப்படுவதால் அவற்றின் செயற்திறன் காலத்தை நீடிக்கவும் பழுதாகும் காலத்தை அதிகரிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது. இதைவிட பல்வேறு வருமான மட்டத்தினருக்கேற்ப பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு பொதியிடல் வழிவகை செய்கிறது உதாரணமாக பிஸ்கற், பற்பசை, தேயிலை போன்ற பொருட்கள் பல்வேறு வருமான மட்டத்தினருக்கேற்ப வேறுபட்ட அளவுகளில் பொதி செய்யப்பட்டுள்ளமையைக் காணலாம்.

### 5 3 புலக்காட்சி நலன்கள் (Perceptual Benefits)

பொதியிடல் நுகர்வோனிடம் பொருளின் தரத்தை உயர்த்திக்காட்டும் மனநிலையை

L. B ஞானப்பிரகாசம்

''ஒரு உற்பத்திப்பொருளின் கொள்கலன் அல்லது அதைச் சுற்றியுள்ள சரை/உறை (WRAPPER) பற்றியதான வடிவமைப்பும் ஆக்கமும் பற்றிய செயற்பாடுகள்'' என வரைவிலக்கணப்படுத்தலாம்- இங்கு அந்தக்கொள்கலன் அல்லது சரை பொதி (PACKAGE) என அழைக்கப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதாரக்கொள்கை பன்முகப்படுத்துதலுடன் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்திற்கு பெருமளவு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன, இதனால் பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் சந்தையில் தமக்குரிய கேள்வியைப்பெற்றுக் கொள்வதில் போட்டியிடவேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளது- உள்நாட்டு வெளிநாட்டுக் கேள்வியைப் பெற்றுக்கொள்வதில் சந்தைக்குவரும் பொருட்களின் பொதியிடல் சிறப்பு அவசியமாகக் கருதப்படுகின்றது- எனவே உற்பத்தி நிறுவனங்கள் தத்தமது பொருட்களை கவர்ச்சிகரமான முறையில் பொதி செய்வதற்கு நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாளுகின்றன. இலங்கையில் கடந்த ஒரு தசாப்த காலமாகவே பொதியிடல் துறையில் அதிக அக்கறை காட்டப்பட்டு வருகின்றது; அபிவிருத்தியடைந்துவரும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இத்துறையில் இலங்கையின் வளர்ச்சி முதன்மையானது- இந்தவகையில் 1992 பெப்ரவரி 27 இல் ''உலக பொதியிடல் பொருட்காட்சி 92'' கலதாரி மெரிடியன் ஹோட்டலில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது இத்தகைய பொருட்காட்சியொன்று இலங்கையில் நடாத்தப்பட்டது இது முதல் தடவையாகும்- உலகம் பொதியிடல்துறையில் அடைந்துவரும் முன்னேற்றத்தை நாமும் அனுசரித்துப் போதல் வேண்டும் என்பதே இப்பொருட்காட்சியின் நோக்கமாகும்

காகிதத்தாலாக்கப்பட்ட சரையை இத்தகைய மூலப் பொதிக்கு எடுத்துக்காட்டாக கூறலாம். இரண்டாந்தரப் பொதி மூலப்பொதியைப் பாதுகாக்கின்றதாகவும், உள்ளடக்கப்பட்டுள்ள உற்பத்திப் பொருளின் பாவனை, அதற்குரிய வியாபாரக்குறி, பண்டக்குறி போன்ற விபரங்களையும், விளக்கங்களையும் கொண்டிருக்கும் 400கிறாம் நெஸ்பிறே பால்மா அடைக்கப்பட்டிருக்கும் மூலப் பொதியைச் சுற்றி உள்ள காகித அட்டைப் பெட்டியை இத்தகைய இரண்டாந்தரப் பொதிக்கு எடுத்துக்காட்டாக கூறலாம்

கப்பலிடுகைப் பொதிகளுஞ் இடப்படுத்துதலுக்கும் அடையாளம்காண்பதற்கும் போக்குவரத்தில் கையாள்வதற்கும் அவசியமாகின்றது- ஒரு கப்பலிடுகைப் பொதிக்கு எடுத்துக்காட்டாக 400 கிறாம் பால்மா அடைக்கப்பட்ட 24 நெஸ்பிறே அட்டைப் பெட்டிகளைக் கொண்ட ஒரு பெரிய காகித அட்டைப் பெட்டியைக் குறிப்பிடலாம்.

இறுதியாக விபரமுத்திரையிடல் (LABELING) பொதியிடலின் ஒரு பகுதிக் கருமமாக அமைகின்றது இது உள்ளே உள்ளபொருள் பற்றிய தகவல்களை நுகர்வோன் புரியக்கூடிய மொழிகளில் அச்சுவடிவில் விபரிக்கின்றதோடு அது சில நாடுகளின் சட்டத் தேவைகளுக்கேற்ப கட்டாயபடுத்தப் பட்டதாகவும் காணப்படுகின்றது- இது இரண்டாந்தரப் பொதியின் வெளியே உள்ள உற்பத்தி செய்த திகதி, பாவனை இறுதித் திகதி, ஆகக் கூடிய சில்லறை விலை, உற்பத்தி அனுமதிப் பத்திர இலக்கம் என்பன போன்றதாக இருக்கும் சில சந்தர்ப்பங்களில் இந்த விபர முத்திரைகள் வேறுபட்ட நிறங்களில் அமைவதன் வாயிலாக பொருளின் விசேட தன்மை வெளிப்படுத்தப்படுவதுண்டு. எடுத்துக்


## L. B. ஞானப்பிரகாசம்

B. Sc (Hons) PFT, Dip in ED

ஆசிரியர், யா / ஹாட்லிக் கல்லூரி


என சில நூலாசிரியர்களால் பாகுபடுத்தப் படுவதிலிருந்து பொதியிடலில் அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

### 3.0 பொதியிடலின் வளர்ச்சி

ஆரம்ப காலத்தில் பொருட்கள் பழுதடையாமல் இருப்பதற்கும், சுலபமாக பொருட்களை எடுத்துச்செல்லும் பொருட்டும் பொருட்களுக்கு பொதியிடல் மேற்கொள்ளப்பட்டது; ஆனால் இன்று சில்லறை வியபார முறையில் நவீன நிறுவன வடிவமைப்புகள் தோன்றியதோடு அதற்கேற்ப பொதியிடலும் தவிர்க்கத்தகாதவகையில் வளர்ச்சி பெற்றுவிட்டது.

### 3.1. சுயசேவை (Self Service)

சிறப்பான சந்தை, பலபகுதிப் பண்டகசாலைகள், கழிவுக்கடைகள் என்பவற்றின் வளர்ச்சியினால் சில்லறை வியாபாரத்தில் சுயசேவை விற்பனைமுறை பெருகிவருகின்றது. அதற்கேற்ப தட்டுகளிலும், காட்சி அறைகளிலும் அடுக்கி வைக்கக்கூடிய முறையில் பொருட்கள் பொதி செய்யப்படுவதோடு நுகர்வோர் காவிச் செல்லக்கூடியதாக கைக்கடக்கமான முறையிலும் பொதி செய்யவேண்டியுள்ளது.

### 3.2. நுகர்வோர் செல்வாக்கு (Consumer Affluence

நுகர்வோர் செல்வாக்கு என்பதன் கருத்து சுலபமான

ப்பட்ட பொருட்களின் பண்டக்குறியையும், அதை உற்பத்தி செய்த நிறுவனங்களையும் நுகர்வோர் எளிதாக அடையாளம் காண்கின்றனர். எனவே உற்பத்தி நிறுவனங்களையும் நுகர்வோர் எளிதாக அடையாளம் காண்கின்றனர். எனவே உற்பத்தி நிறுவனங்கள் பொதியிடலை நுகர்வோரைக் கவரும் ஒரு நுட்பமாக கையாள்கின்றன:

### 4.0 சிறந்த பொதியிடலின் சிறப்பம்சங்கள்

சந்தையின் தன்மையினையும், அப்பொருட்களை வாங்குகின்ற நுகர்வோரின் தன்மையினையும் கவனத்தில் எடுக்காது பொதியிடலைத் தனியே அர்த்தமுள்ள ஒன்றாகக் கொள்ளமுடியாது எடுத்துக்காட்டாக உள்ளூரில் (வல்லை வெளி) விளைகின்ற கறிஉப்பு விலை குறைவு என்றதும், தூயவெண்மையாக இருக்கிறதுமான ஒரே காரணத்துக்காக நுகர்வோர் அவற்றை வாங்குவதில் ஆர்வம் செலுத்துகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் அதில் அயோடின் சேர்க்கப்படவில்லை என்பது பற்றிக் கவலை கொள்வதில்லை. இங்கு பொதிசெய்யப்பட்ட கழுவியஉப்பு (Washed Salt) உள்ளூரில் விளைகின்ற உப்பு

அ] கவர்ச்சி
ஆ) எடுத்துச் செல்வதில் சுலபம்
இ) பாவனையில் சுலபத் தன்மை
ஈ) பொதியிடல் கிரயத்தில் சிக்கனம்
உ) பொருட்களை வேறுபடுத்திஇனங்காணக் கூடிய தன்மை

எனவே உற்பத்தியாளர் தமக்குகந்த பொதியிடலைத் தெரிவுசெய்யும்போது மேற்குறிப்பிட்ட சிறப்பம்சங்களை கவனத்திற்கொண்டு தமக்குக் கிடைக்கக்கூடிய மூலப் பொருள், தொழில் நுட்பம் என்பவற்றிற்கேற்ப கொள்வனவுக் கட்டளை நிபந்தனைகள், நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான சட்ட விதிகள், தேசிய பொதியிடல் மத்திய நிலையத்தின் ஆலோசனைகள் என்பன தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டியவர்களாக உள்ளனர்.

### 5.0 பொதியிடலின் நலன்கள்

அண்மைக்காலங்களில் பொதியிடல் சந்தைப்படுத்தல் கருவிகளில் ஒன்றாக வளர்ந்துவருகின்றது சிறந்தமுறையில் வடிவமைக்கப்பட்ட பொதிகள் பாவனையாளருக்கு சுலபமானபாவனைப் பெறுமதியையும் Convenience Value உற்பத்தியாளருக்கு மேம்படுத்தல் பெறுமதியையும் (Promotional - Value) உருவாக்கிக்கொடுக்கின்றன

### 5.1 தகவல் தொடர்பு நலன்கள் (Communication Benefits)

பொருளின் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள் எவை? பொருளை எவ்வாறு பாவிக்கவேண்டும்? என்ற தகவல்களைப் பாவனையாளருக்கு வழங்கு

உணவுப் பொருட்களிலிருந்தும் விலக்கி வைக்கவும்'' என்ற பீடைநாசினிகளின் பொதிகளில் குறித்துரைக்கப்பட்ட எச்சரிக்கை வாக்கியங்களையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்

### 5.2 தொழிற்பாட்டு நலன்கள் (Functional Benefits)

முக்கியமான தொழிற்பாட்டு நலன்களான சுலபமான பாவனை, பாதுகாப்பு, களஞ்சியப்படுத்துதல், நலன் என்பவற்றைப் பொதியிடல் தன்னகத்தே கொண்டுள்ளது ஒரு தடவைக்குப் பயன்படுத்தப்போதுமான அளவில்சிறிய பொதிகளில் விற்பனையாகும் சண்சில்க் சாம்போ சுலபமான பாவனை நலனை பாவனையாளருக்கு வழங்குகின்றது. இவ்வாறே தற்போது விற்பனையாகும் பனடோல் வலி நிவாரண மாத்திரைகள் விரலினால் அழுத்தி எடுக்கப்படும் (Tamper Resistant Containers) கொள்கலன்களில் பொதிசெய்யப்படுவதால் தேவைக்கேற்ப பயன்படுத்திய பின் மீதியைப் பாதுகாக்கக் கூடியதாக உள்ளது

உள்ளடக்கப்பட்டபொருட்களுக்குச் சேதம் ஏற்படாத வகையிலும் பொதிகளை இலகுவாகக் கையாளக்கூடிய முறையிலும் பொதியிடல் தொழில்நுட்பங்கள் முன்னேறியுள்ளன. நொருங்கக் கூடிய சிற்றுண்டி அதற்கேற்ற நொருங்குதலிலிருந்து உத்தரவாதமளிக்கும் (Crush- proofcylindes) பொதிகளில் பொதியிடப்படுவதையும், உள்ளே உள்ள காதுக் குச்சிகளை (Ear-Buds) எடுத்துப் பாவித்தபின் மீதியை அதே பொதியில் பேணத்தக்க மீண்டும் ஒட்டத்தக்க (Re-sealable) பொதிகளில் விற்பனையாவதையும் அவதானிக்கலாம் புதிய தொழில்

டம் பொருளின் தரத்தை உயர்த்திக்காட்டும் மனநிலையை ஏற்படுத்துகின்றது' ஒழுங்கான முறையில் பொதிசெய்யப்படாத பொருட்களைவிட சிறந்த முறையில் பொதி செய்யப்பட்ட பொருட்கள் கலப்படமற்றதாகவும், சுகாதாரமானதாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையை நுகர்வோனிடம் ஏற்படுத்துவதால் அவற்றிற்கு சிறிது அதிக விலையைக் கொடுத்து வாங்கவும், அதன்மூலம் தமது அந்தஸ்தை நிலைநாட்டுவதற்கும்கூட உயர்வருமான நடுத்தர வருமான நுகர்வோர் விரும்புகின்றனர் உதாரணமாக, பொதியிடப்படாத சோயா துண்டுகளை விட பொதியிடப்பட்ட T. V. P. சோயாத்துண்டுகள் நுகர்வோர் நம்பிக்கை பெற்றவையாகவும், போத்தல்களில் அடைக்கப்பட்ட பீ. சீ. சீ தேங்காய் எண்ணெய் சாதாரண பொதியிடப்படாத தேங்காய் எண்ணெய்யைவிட சிறந்தது என்ற நன்மதிப்பையும் பெற்றுள்ளன:

### 6.0 பொதியிடலின் பிரதி கூலங்கள்

பொதியிடலில் பல்வேறு நலன்கள் காணப்பட்டபோதிலும்

(அ) பொருளின் கிரயத்தை உயர்த்துதல்
(ஆ) தரங்குறைந்த பொருட்களும்கூடகவர்ச்சிகரமான பொதியிடலினால் சந்தையைக் கைப்பற்றுதல்
(இ) வெற்றுப் பொதிகளினால் சூழல் மாசடைதல்
(ஈ) கொள்கலன்களின் தட்டுப்பாடு உற்பத்தியைக் கட்டுப்படுத்தக் கூடியதாகஇருத்தல் போன்ற பிரதி

(5ஆம் பக்கம் பார்க்க)

சிந்தனைக்கு

ஆச்சுறுத்தலில் உரத்த ஆரவாரம்செய்பவர்கள் - அதை நிறைவேற்றுவதில் மிக்க பலவீனமானவர்கள்.

- சார்ல்ஸ் கோல்ட்டன்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2028
தபால் பெட்டி எண் 05


## இயன்றால் முயலுங்கள் பார்க்கலாம்

"இயலுமானால் இலங்கையில் யாராவது சமாதானத்தை உருவாக்கிப் பாருங்கள்" என்பதுபோலுள்ளது சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விடுக்கும் அறைகூவல்கள். இதில் சிங்களவரென்ன, தமிழரென்ன, உலகில் உள்ள வேறு யாரென்ன எவருக்கும் சவாலிவிட டி. பி. விஜேதுங்கா தீர்மானித்துவிட்டதாகவே அவரது நடவடிக்கைகள் உள்ளன.

இதற்காக சிறிலங்கா ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் அவர் தயாராக இருப்பதாகத் தெரிகின்றது. இதன் ஒரு கட்டமே வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்படும் தமது கட்சியைச் சேர்ந்த எவரும் தனது முன் அனுமதியின்றிப் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்ற அறிவிப்பாகும்.

டி. பி. விஜேதுங்காவின் இவ்வறிவிப்பானது ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கான கதவுகள் அடைக்கப்பட்டுவிட்டன என்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

ஆனால், டி. பி. விஜேதுங்காவின் பேச்சில் முன் அனுமதி பெற்றுப் பேச்சுக்களை நடத்தலாம் எனப் பொருள்கொள்ளமுடியுமானாலும், வடக்கு - கிழக்கில் இருப்பது 'பயங்கரவாதப் பிரச்சினை'யே எனத் தான் இன்னமும் நம்புவதாகக்கூறும் டி. பி. யிடம் பேச்சுக்கான அனுமதிபெறுதல் என்பது 'கல்லில் நார் உரிக்கும்' செயலாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அதிலும், சபாநாயகர் முகமதின் யாழ் விஜயத்தை டி. பி. விஜேதுங்கா தடுத்துநிறுத்தியதன்பின்னர் யாராவது இதுகுறித்து சிந்திப்பார்களா என்பது சந்தேகமே. சபாநாயகர் முகமதின் முயற்சி அநேகமாக நல்ல முடிவுகளைக் கொண்டுவரும் என உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், டி. பி. விஜேதுங்கா மேற்கொண்ட இந்நடவடிக்கையானது சமாதானத்தின் விரோதியாக அவர் எந்தளவில் செயற்படுகின்றார் என்பதைப் புலப்படுத்தும் அம்சமாகவே உள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்படவேண்டும், அங்கு இரத்தம் சிந்துவது தடுத்து நிறுத்தப்படவேண்டும் என இன்று பல தரப்பினரும் விரும்புகின்றனர். இறுதியாக தென்மாகாணத்தில் இடம்பெற்ற தேர்தலின்மூலம் இப்போருக்கு முடிவுகொண்டு

# அ. தி. மு. க. ஆபத்து வந்தால் நாம் உறுதுணையாவோம்

## திராவிடர் கழகம் தெரிவிப்பு

(சென்னை)

அ. இ. அ. தி. மு. க. அரசுக்கு ஆபத்து வந்தால் உறுதுணையாக இருப்போம் என்று திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி கூறியுள்ளார்.

தஞ்சையை அடுத்துள்ள வல்லம் பகுதியில் பெரியார் மணியம்மை பெண்கள் கல்லூரியில் ஈ. வெ. ரா. நாகம்மையார் விடுதிக் கட்டிட திறப்பு விழாவும், முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு "சமூக நீதி காத்த வீராங்கனை" பட்டமளிப்பு விழாவும் நடைபெற்றது அப்போது அதில் கலந்து கொண்டு பேசிய கி. வீரமணி மேலும் கூறுகையில், நிரந்தரமான பாராட்டுக்கும் பாதுகாப்புக்கும் உரியவர் நமது முதல்வர். அதனால் அவரை சமூக நீதி காத்த வீராங்கனையாக நாம் பார்க்கிறோம். எங்களுக்கு சரியென்று படும் கருத்தை விட்டுக் கொடுக்கமாட்டோம். எதிர் நீச்சல் போட்டு வெற்றி பெறுவோம். யாருடைய விமர்சனத்தையும் பற்றி நாம் கவலைப்படமாட்டோம். முதல் அமைச்சராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பெரியார் அறக்கட்டளைக்கு நீங்களும் ஒரு நிரந்தர புரவலர்தான். நல்லது செய்யும்போது ஓடோடி வந்து பாராட்டுவதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்களல்ல. அன்னை தெரேசாவும் கலந்துகொண்டவிழாவில் பெண்களுக்கென 50 சதவீதம் இட ஒதுக்கீடு செய்ய பரிசீலனை செய்து வருகிறோம் எனத் தெரிவித்ததன் மூலம், முதலமைச்சர் பொறி ஏட்டில் பொறிக்கப்படும் வெற்றி வீராங்கனையாக உயர்ந்து நிற்கின்றார். பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்தால் தான் ஆண் - பெண் வேறுபாடு இருக்காது என்று பெரியார் சொன்னார். நீங்கள் செயல்படுத்தி வருகிறீர்கள். நன்றி உள்ளவர்கள் உங்களை பாராட்டுவதில் இருந்து தவறமாட்டார்கள். நாங்கள் நன்றி மறக்காதவர்கள். 69 சதவீதம் இட ஒதுக்கீடு சட்டத்தை சட்டமாக்கியது மூலம் உங்கள் ஆற்றலின் தனித்தன்மையைக் காட்டுகிறது. இதன் மூலம் சமூக நீதி காத்த வீராங்கனையாக உயர்ந்து விட்டீர்கள். ஆலயங்களில் அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக வேண்டும் என்ற அய்யாவின் கடைசி ஆசையை நீங்கள் செயல்படுத்தப் போவதாக அறிவித்ததன் மூலம் மேலும் உயர்ந்து விட்டீர்கள்.

உங்கள் ஆட்சிக்கு எந்த இடத்திலிருந்து ஆபத்து வந்தாலும் கறுப்புச் சட்டையினர் தற்கொலைப் படையாக மாறுவார்கள். கறுப்பு மெழுகுவர்த்திகளாகி நாங்கள் உங்கள் ஆட்சிக்கு ஒளி கொடுத்து உறுதுணையாக இருப்போம் எனவும் வீரமணி தெரிவித்தார்.

# ஆப்கான் யுத்த நிறுத்தம்; ஐ. நா. குழு விரைவு

ஆப்கானிஸ்தானில் சண்டையை நிறுத்துவதற்கு உதவும் முகமாக பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக ஐ. நா. தூதுக்குழு ஒன்று நேற்று காபூல் போய் சேர்ந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இரண்டு வருடகாலமாக நடைபெறும் உள்நாட்டுப்போரில் 11,000 பேர் உயிரிழந்திருப்பதுடன் பல லட்சக்கணக்கான ரூபா சொத்துக்களும் நாசமாக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இத்தூதுக்குழு காபூலில் தங்கியிருக்கும் மூன்று தினங்களிலும், போர் நிறுத்தமொன்றைக் கடைப்பிடிக்க ஆப்கான் அதிபர் ரப்பானியும், பிரதமர் குல்புதின் ஹெக்மதியாரும் இணக்கம்தெரிவித்துள்ளனர்.

# தென்னாசியாவில் ஆய்வு அமெ. குழு மேற்கொள்ளும்

(வாஷிங்டன்)

சோவியத் யூனியனின் வீழ்ச்சியோடு தெற்காசிய அமெரிக்க உறவுகளில் மாற்றம் தேவையென்று அமெரிக்கா கருதுவதினால் தெற்காசிய நாடுகளுடன் அமெரிக்கா கொண்டுள்ள உறவுகளில் ஒரு திருப்பமேற்படுமென்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பொருட்டு அமெரிக்க ஆசிய சங்கத்தைச் சேர்ந்த 15 பேரைக் கொண்டுள்ள உயர் மட்டக் குழு வொன்று தற்போது தெற்காசியாவில் அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் பற்றி பரிசீலனை செய்யவல்ல ஆய்வொன்றில் ஈடுபட்டுள்ளது.

எதிர் எதிர் தரப்பாக விளங்கும் பாகிஸ்தானுடனும் இந்தியாவுடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்வதில் அமெரிக்கா முக்கிய கவனம் செலுத்துவதாகக் கருதப்படுகிறது. இக்குழுவினர் இந்நாடுகளுடன் நேபாளம் பங்களாதேஷ் இலங்கை ஆகிய நாடுகளுக்கும் சென்று ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அரசசார்பற்ற பிரத்தியேக நிதியுதவியுடன் இயங்கும் இக்குழு தெற்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்க உறவுகள் பற்றிய அறிக்கையை செப்டம்பர் மாதம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்திய பொலிஸ் அத்துமீறி நேபாளத்தில் தேடுதல்

(காட்மண்டு)

இந்தியப் பொலிசார் நேபாளத்தலைநகர் காத்மண்டுவில் எதேச்சாதிகாரமாக தேடுதல் நடத்தியதற்கு இந்தியா காரணம் கூறவேண்டும் நேபாளப்பிரதமர் கொய்ரால இராஜினாமாச் செய்ய வேண்டுமென அறுபதுக்கும் அதிகமான நேபாள எம். பிகள் பாராளுமன்றத்தில் கோரிக்கை எழுப்பினர்.

சாதாரண உடையில் இந்திய எல்லையைத் தாண்டி காத்மண்டுவில் பிரவேசித்த இருபது பேரைக்கொண்ட பொலிஸ் குழுவுக்கு புதுடில்லி பொலிஸ் பிரதி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவரும் உத்தரப்பிரதேச பொலிஸ்சுப்ரின்டன்ற் ஒருவரும் தலைமை வகித்தனர் நேபாளத்தினுள் எவ்வித அதிகாரமுமின்றி நுழைந்த இக்குழு முன்னாள் வர்த்தக இயக்குனர் சிவபிரசாத் சர்மாவின் வீட்டில் பப்லூசிங் என்ற கொலைஞனை தேடியதாக தெரிவிக்கப்படுகிறது.

தவறான வீட்டில் தேடுதல் நடைபெறுவதை தெரிந்துகொண்ட இந்தியப் பொலிஸ் குழு மற்றுமொரு வீட்டை தேடிச்சென்றுள்ளனர். புதுடில்லி வியாபாரி ஒருவரின் வீட்டில் இவர்கள் தேடுதல் நடத்தினர் அப்போது அவ்வியாபாரி வீட்டில் இருக்கவில்லை பப்லூசிங் பற்றித் தகவல் கேட்டு வீட்டுவேலையாட்களை இந்தியப்பொலிசார் மிரட்டினர்

அறைகளிலிருந்த பொருட்கள் அங்குமிங்கும் எறியப்பட்டதோடு நான்கு தங்க மோதிரங்களையும் பணத்தையும் பொலிஸ் அதிகாரிகள் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி இன்னோர் நாட்டின் தலைநகரில் எதேச்சாதிகாரத் தேடுதல் நடத்துவது சர்வதேச சட்டத்தை மீறும்செயலாகும் என நேபாள எம். பிகள் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினர். இந்தியப் பொலிசார் தேடுதல் நடத்தியது பற்றி தமக்கொன்றும் தெரியாதென நேபாள உள்விவகார அமைச்சர் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சகம் தேடுதல் பற்றி ஒன்றும் தமக்கு தெரியாது என அறிவித்தது.

இந்நிகழ்ச்சி பற்றி மேலிடத்து அறிக்கை கிடைக்கும் வரையில் எம்மால் ஒன்றும் கூறமுடியாது என நேபாளத்திலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தமிழக அரசு ஊழல் விசாரணை வேண்டும்

## முன்னாள் அமைச்சர்கள் கோரிக்கை

(டில்லி)

தமிழக காங்கிரஸ் கமிட்டி தமிழக அரசின் மீது கூறியுள்ள ஊழல் குற்றச்சாட்டு மற்றும் புகார்களை விசாரிப்பதற்கு மத்திய அரசு ஆணைக்குழு ஒன்றை நிறுவ வேண்டும் என்று தமிழக மாநில முன்னாள் அமைச்சர்கள் மூவர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புதுடில்லியில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசிய க. இராசாராம், அழகு திருநாவுக்கரசு, மற்றும் இ. விசுவநாதன் ஆகியோர் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளனர்.

ஹங்கேரிக்கு

# இராணுவ ரகசியங்களை விற்ற படையினருக்கு சிறை

(ராம்பா)

1985இல் ஜேர்மனியில் ...

...மும் கிடைக்கலாம். தீர்ப்பு ...

# தீர்ப்பு ஏற்புடையதல்ல

(கொழும்பு)

சூரியகந்த மரணவிசாரணையை இடைநடுவில் நிறுத்துவதற்கு எம்பிலிப்பிட்டிய மஜிஸ்ரேட் கொடுத்த முடிவு ஏற்புடையது அல்ல என இரத்தினபுரி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனைத் தொடர்ந்துவிசாரணை மேற்கொள்ளுமாறு எம்பிலிப்பிட்டிய மஜிஸ்ரேட்டை கோரும் மனுவொன்றை தாம் தாக்கல் செய்ய போவதாக சப்ரகமுவா மாகாணசபை உறுப்பினர் பவித்திர வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

விரும்புகின்றனர். இறுதியாக தென்மாகாணத்தில் இடம் பெற்ற தேர்தலின்மூலம் இப்போருக்கு முடிவுகொண்டு வரப்படவேண்டும் எனச் சிங்கள மக்கள் விரும்புவதும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. தமிழ் மக்கள் எப்பொழுதுமே தமது உரிமைகளுடன் சமாதானமாகவே வாழ விரும்புகின்றனர்.

ஆனால், மக்களின் விருப்பு எவ்வாறிருப்பினும், டி. பி. விஜேதுங்கா தனது இராணுவத்தீர்வு என்ற பிடியில் இருந்து விலகிக்கொள்வதாகத் தெரியவில்லை. இறுதிவரை தனக்குள்ள முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி இராணுவத் தீர்வை நாடுவதிலேயே குறிக்கோளாகவுள்ளார். தென்மாகாண சபைத்தேர்தலில் ஐ.தே.க சந்தித்த தோல்வியானது, டி. பி. விஜேதுங்கா கடைப்பிடித்த இனவாதப்போக்கிற்குக் கிடைத்த தோல்வி என கட்சிக்குள் உள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் விமர்சிப்பதைக்கூட அவர் கருத்திற்கொள்வதாகத் தெரியவில்லை.

இந்தவகையில், டி. பி. விஜேதுங்கா ஓர் அரசியல்வாதி என்பதைவிட ஒரு பௌத்த - சிங்களப் பேரினவாத வெறியர் என்று கூறுவதே பொருத்தப்பாடானதாகும். சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே ஆர் ஜெயவர்த்தனா, ஆர் பிரேமதாசா ஆகியோரும் பௌத்த - சிங்கள பேரினவாத சிந்தனை கொண்டவர்கள்தான் ஆயினும், தம்மை ஓர் அரசியற் தலைவர்களாகவே காட்டிக்கொள்ள அவர்கள் இறுதிவரை முற்பட்டனர். ஆனால், டி பி விஜேதுங்கா அந்தளவுதானும் முற்படவில்லை தன்னை ஒரு நாட்டின் தலைவன், ஓர் அரசியல்வாதி என்பனவற்றை விட ஒரு பௌத்த - சிங்கள பேரினவாத அரசின் தலைவன் என வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவே விரும்புகின்றார்.

ஆனால், டி பி விஜேதுங்காவின் இந்நிலைப்பாடானது, தமிழ் மக்களுக்கு புதியதொரு அச்சுறுத்தலல்ல ஏனெனில், தமது உரிமையைப் போராடித்தான் பெறவேண்டும் என்ற நிலைக்கு ஏற்கனவே தமிழர்கள் வந்துவிட்டார்கள். ஆனால், இது சிங்கள மக்களுக்கும், சிறிலங்கா அரசிற்குமே ஆபத்தானதாகும். இது யுத்தத்தை விரும்பாத மக்கள்மீது யுத்தத்தைத் திணிப்பதாகவும், நாட்டின் வளத்தைப் பெருமளவில் யுத்தத்தில் வீண்விரயம் செய்வதாகவே அமையும். சிறிலங்காவினால் இந்த யுத்தம் வெல்லப்பட முடியாத யுத்தம் என்பதால் மேற்கூறப்பட்டவற்றை இழந்த பின்பும் சிங்கள மக்கள் நன்மைஎதையும் அடைந்துவிடப்போவதில்லை. இந்நிலையில், யுத்தத்தால் தொடர்ந்து விளையப்போகும் பாதிப்புக்களை நிறுத்தவேண்டுமானால், சிங்கள மக்கள் அரசிற்கு எதிராகப் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

(ராம்பா)

1985இல் ஜேர்மனியில் நிலைகொண்டிருந்த போது ஹங்கேரிக்கு மிக இரகசியமாக தகவல்களை வழங்கிய இரு அமெரிக்கப் படையினர் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர். இவ்விருவருக்கும் ஆயுட்தண்டனையுடன் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் டொலர் அபராதமும் கிடைக்கலாம். தீர்ப்பு ஜூன் மாதம் வழங்கப்படும்.

ஜேர்மனிக்கு கடமைக்கு மேற்கண்ட இருவரும் அனுப்பப்பட்டனர் என்றும் அங்கு அவர்கள் மத்திய ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கான இராணுவ ஆவணங்களை ஹங்கேரிய புலனாய்வு சேவைக்கு வழங்கிவந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வர்த்தகம்

கூலங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

## 7. 0 தேசிய பொதியிடல் மத்தியநிலையம்

தேசிய பொதியிடல் மத்திய நிலையம் 1983இல் உருவாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு தனிக் கம்பனியாகும். இதில் சிறிலங்கா பொதியிடல் நிலையம் தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (N. E R D. C) கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம், இலங்கை கட்டளைகள் பணியகம் என்பன அங்கம் வகிக்கின்றன. இந் நிறுவனம் -

(அ) பொதியிடல் தொடர்பான வர்த்தக தொழில்நுட்ப தகவல்களைச் சேகரித்தல்

(ஆ) பொதியிடல் தொடர்பான தொழில் நுட்பத்தகவல்களை வழங்குதல்

(இ) பொதியிடல் கிரயத்தைக் குறைத்தல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்

(ஈ) புதிய பொதியிடல் முறைகளை அறிமுகம் செய்தல்

(உ) பொதியிடல் தொடர்பான பொருட்காட்சிகளை காலத்திற்குக்காலம் நடாத்துதல்

(ஊ) புதிய பொதியிடல் மூலப்பொருட்களை அறிமுகஞ் செய்தல்

(எ) பொதியிடல் தொடர்பான பயிற்சி வகுப்புகளை நடாத்துதல்

(ஏ) பொதியிடல் தொடர்பான பிரச்சினைகளை அரசுக்கு அறியத்தருதல்

போன்ற பணிகளை ஆற்றுகின்றது.

## 8. 0. முடிவுரை

பொதிசெய்தல் மற்றும்அது தொடர்பான தொழில் நுட்பம் என்பன இலங்கையைப் பொறுத்தவரையில் சமீபகாலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டன இலங்கை இரண்டாயிரமாவது ஆண்டை அடையும்போதுகைத்தொழில் நாடு என்றஅந்தஸ்தை அடையத் திட்டமிட்டுள்ளது- அத்தோடு 1992ஆம் ஆண்டை ஏற்றுமதி ஆண்டாகவும் பிரகடனம் செய்திருந்தது இத்தகைய ஒருசூழ்நிலையில் கைத்தொழில்வளர்ச்சி மற்றும் உற்பத்தி ஏற்றுமதி ஆகியவற்றுடன் பொதியிடலும் நன்கு வளர்ச்சியடையவேண்டும்- அப்போதுதான் சர்வதேச சந்தையில் பல்வேறு பொருள்களுடனும் இலங்கையின் பொருள்கள் போட்டியிடக் கூடியதாக இருக்கும்

யர்பாரி வீட்டில் இருக்கவில்லை பப்லூசின் பற்றித் தகவல் கேட்டு வீட்டுவேலை ... திலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கொலையில் சம்பந்தப்பட்ட டாக்டருக்கு மீண்டும் வேலை

(கொழும்பு)

குழந்தைகளை கொன்றது தொடர்பான கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட இளமையரான வைத்தியர் ஒருவருக்கு லண்டனில் உள்ள வைத்தியசாலை மீண்டும் அவருக்கு அங்கு வேலையை வழங்கியுள்ளது

இவருடன் பணியாற்றிய பெவர்லி அலிட் என்ற தாதிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இன்சுலின் மூலம் நான்குகுழந்தைகளைக் கொன்றமை அவர்களை மூச்சுத்திணற வைத்தமை, மற்றும் ஒன்பது பேரை தாக்கியமை தொடர்பாக இவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட வைத்தியர் மீண்டும் அவ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அதன் முகாமையாளர், குழந்தை நோய் வைத்திய நிபுணரான சரித் நாணயகார எதிர்வரும் 5ஆம் திகதி முதல் பணிபுரியவுள்ளார். வைத்தியர் நாணயக்கார சிறந்த மருத்துவர் இவர் இதற்கு முன்னரும் பல ஆண்டுகள் இங்கு பணியாற்றியவர், ஊழியர்கள் நோயாளர்களால் நன்கு மதிக்கப்பட்டவர் என்றார்.

# ஐ. தே. க. இனவாதப்பேச்சு தேர்தல் தோல்விக்குக் காரணம்

### கட்சி மூத்த உறுப்பினர் கருத்து

(கொழும்பு)

தென்மாகாணத் தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடைந்தமைக்கு இனவாதப் பேச்சும் ஒரு காரணமாகும். தென்மாகாணத் தேர்தலில் ஐ தே கவிற்கு ஏற்பட்ட தோல்வி தொடர்பாக விபரமாக ஆராய்ந்து வரும் மூத்த உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு கருதுகின்றனராம்.

தென் மாகாணத்திலுள்ள சுமார் முப்பதாயிரம் தமிழ் வாக்காளர்களின் வாக்குகளை முழுமையாகப் பெற முடியாமையும் முஸ்லிம்களின் வாக்குகளை முழுமையாக இழந்தமையும் இனவாதப் பேச்சுக்களின் பெரும் விளைவே ஆகும்.

இதனை புள்ளிவிபரங்களுடன் சுட்டிக்காட்டியுள்ள இவ் உறுப்பினர்கள் மேலும் கூறுகையில் இனவாதப் பேச்சுக்கு (தே)ல்பாலண மக்கள் ஒத்துழைப்பு வழங்காமையும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் உறவினர்களும், சகாக்களும் தேர்தல்பிரசாரத்தில் ஓரம்கட்டப் பட்டமையும் தோல்விக்குத் துணைய இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

# தந்தை செல்வா அஞ்சலி நிகழ்வு

தந்தை செல்வாவின் 96 வது ஜனனதினத்தையொட்டி கடந்த வியாழன் தந்தை செல்வா நினைவாலயத்தில் மலர் அஞ்சலியும் கண்டிக் கூளி புனிதர் யோவான் தேவாலயத்தில் தந்தை செல்வாவின் வாழ்வுக்கான இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் ஆராதனையும் இடம்பெற்றன

புரகமுவா மாகாணசபைஉறுப்பினர் பவித்திர வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

# நட்டஈடு வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

1980-ஆம் ஆண்டு ஜூன் மாத வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு இதுவரை மீண்டும் வேலையை பெறாத மேலும் மூவாயிரம் பேரை மீள வேலைக்கு அமர்த்துவது எனவும் அவர்களுக்கான நட்டஈட்டை வழங்குவது எனவும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவர்களுக்கு மேற்படி நட்டஈடு வழங்குவதற்கு இருபது கோடி ருபா தேவை என தொழில் அமைச்சு மதிப்பீடு செய்துள்ளது

## புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சி நிரல்

1994-04 04 திங்கள் இரவு
8-01ற்கு-அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''தமிழ் ஈழத்தாய் பூபதி''
8-10ற்கு- தாயகப்பாடல்கள்
8 20ற்கு- செய்திச்சரம்
8-30ற்கு-செய்திகள்
8-40ற்கு- தரிசனம் - குருநகர் கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் அவர்களுடனான செவ்வி
1994-04-05செவ்வாய் காலை
7-02ற்கு-மாவீர வணக்கம்
7-15ற்கு-அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி 'அணையாத தியாக தீபமே'
7-25ற்கு- இன்றைய தாரகை
7-45ற்கு-செய்திகள்
7-50ற்கு-பத்திரிகைச்செய்திகள்
7-55ற்கு-தாயகப்பாடல்.

# அதிகாரப்பரவலாக்கல் மூலம் பிரச்சினையைத்தீர்க்க விரும்புகிறோம்

## - சந்திரிகா குமாரணதுங்க

(கொழும்பு)

அதிகாரங்களைக் கணிசமான அளவுக்கு பரவலாக்குவதன் மூலம் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு நாம்விரும்புகின்றோம்; அர்த்தமுள்ள அதிகார பரவலாக்கல் நாடு முழுவதற்கும் தேவையானதாகும். இவ்வாறு பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல் மாகாண முதலமைச்சருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பு சமுத்திரா ஹோட்டலில் இராஜதந்திரிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், தற்போதைய அரசாங்கத்தில் எண்பது அமைச்சுகள் உள்ளன. நாம் பதவிக்கு வந்தால் இவை இருபதாகக் குறைக்கப்படும். எமது கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தற்போதைய அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கை தொடரும். தனியார் துறையினர் அரசாங்கத்தின் பங்காளிகளாக உற்பத்தியின் என்ஜின்களாக தொடர்ந்தும் இருப்பார்கள். வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்று ஊக்கம் அளிப்போம். தாராளமயக் கொள்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும்; நிவாரணம் அளிப்பதைவிடவும் மக்களை உழைப்பாளிகளாக்கி உற்பத்தியைப் பெருக்குவதே எமது கொள்கையாக இருக்கும்; உள்ளூர் கைத்தொழில்களுக்கு பாதுகாப்புடன் வரிச்சலுகை, கடன் வசதி என்பனவும் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 01-04-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1516

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

22-6922, 26-,7286, 26-1724, 27-5775, 41-7563, 26-6983, 26-6775, 27-6762, 24-9549, 26-2291, 27-4301, 27-9489, 28-5484, 24-9390, 26-7627, 24-9856, 41-5015, 24-6411, 43-4170, 40-2249 42-1074, 43-0517.

### 02 04- 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1526

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

41-7865, 40-9188, 41-6784, 40-7299, 41-6686, 40-2829, 24-2545, 26-4747, 28-4672, 24-9609, 26-1169, 26-8674, 27-2039, 26-1349, 26-3068, 24-4467, 24-6475, 24-6691.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

41-9396, 42-3320, 41-4129, 27-9825, 28-6546, 42-1059, 27-5406, 41-9530, 26-9158, 26-4882, 26-8746, 26-3127, 24-5454, 26-7420, 28-6623, 27-9771, 42-1320, 24-7672, 28-5294, 42-3339, 26-6075, 26-4722, 24-4282, 26-4393

### 03- 04- 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1536

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

42-2364, 41-5605, 40-1688, 42-3514, 27-3907, 26 4945, 26-3495, 26-4683, 24-2024 27-5482, 24-5174 28-9186, 26-2070, 26-3185, 24-6448, 26 2277, 27-3449, 26-4874, 24-3897.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-2944, 26-7252.


இன்று முதல்

யாழ் ஸ்ரீதர் திரையில்

தினசரி மாலை 6.00 மணி

சனி ஞாயிறு காலை 10.30, பி. ப 2.30, மாலை 4.00 - 6.00 மணி

YOUNG DRAGONS


## அதிபர்கள் கவனத்திற்கு

பாடசாலை மாணவர்களுக்கான ஜூன், செப்டம்பர், மாதத்திற்கான மதிய உணவு முத்திரைகள் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதாக அறிகிறோம். இதுவிடயம் தொடர்பாக மேலும் சில தகவல்கள் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால் மறு அறிவித்தல் வரை அவ்வுணவு முத்திரைகளை வழங்கவேண்டாமென சகல பாடசாலை அதிபர்களையும் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# இலங்கை உள்நாட்டுப் போருக்கு தீர்வு காண பிரிட்டன் முயலவேண்டும்

## லண்டன் லூசியன் நகர மேயர் சின்னமணி

(லண்டன்)

இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு பேச்சுவார்த்தை மூலம் இணக்கத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு பிரிட்டிஷ் அரசு தனது நல்லெண்ணத்தை பயன்படுத்த வேண்டும் என பிரிட்டனின் லூசியன் மேயர் சின்னமணி வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கொமன் சபையில் (மக்கள் பிரதிநிதிகள் சபை) கடந்த வாரம் திங்களன்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கோரினார். புலிகள் இயக்கத்தை பயங்கரவாதக் குழு என அழைப்பது பொருத்தமற்றது. உண்மையில் அவர்கள் தேசிய விடுதலை இயக்கத்தினரே. திட்டமிட்டு தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட அடக்கு முறைகள், பாரபட்சங்களின் விளைவாகவே அவர்கள் ஆயுதங்கள் ஏந்தவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

புலிகள் அமைப்பு தோன்றியதற்கான பொறுப்பை தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசுகளே ஏற்க வேண்டும். கொடூரமான இப்போரை முடிவுக்கு கொண்டு வர அரசு இப்போது அதன் பங்கை ஆற்ற வேண்டும்.

இனவாத நோக்கம் கொண்ட சிங்கள அரசியல் வாதிகளின் செயல்களினால் சிங்கள மக்கள் விரக்தியடைந்து வருகின்றனர். சமாதான ரீதியிலான தீர்வைக் காண்பதிலேயே சிங்கள மக்கள் இப்போது பெரிதும் அக்கறை கொண்டுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட குறிப்பாக வடக்கில் உள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்யப்பட வேண்டும். யாழ். ஆஸ்பத்திரிக்கு சில வகை உபகரணங்களை வாங்க நிதிதிரட்ட வேண்டும் என சின்னமணி தனது உரையில் தெரிவித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் எம். பி. ஒருவர் இந்த விவகாரங்களை பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் பாராளுமன்ற குழுவிற்கு கொண்டுவருவதாக உறுதியளித்தார். லூசியன் நகர மேயர் சின்னமணி அண்மையில் இலங்கை விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சோதனை சாவடிகளில் இன்னமும் முகமூடிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் வழமைக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் சோதனை நிலையங்களில் முகமூடி அணிந்தவர்கள் வைத்திருக்கப்படுவது குறித்து அங்கு சென்ற எதிர்க்கட்சி பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

முகமூடிக்காரர்கள் தமக்கு தனிப்பட்ட கோபக்காரர்கள் இருப்பின் அவர்களுக்குத் தலையாட்டி விட்டால் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதாக இவர்கள் குறிப்பிட்டனர். சோதனைச் சாவடிகளில் பெண்கள் அநாகரிகமாக சோதனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஜே. ஆர். - தொண்டா சந்திப்பு; ஐ. தே. க. சமரசம் செய்ய முயற்சி

தென் மாகாணத் தேர்தல் முடிவுகளையடுத்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது சிறுபான்மையினர் வாக்குகளைக் கவருவதற்கான முயற்சியில் ஐ. தே. கவின் மூத்த தலைவர்கள் பலரும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு பி. பி. ஸியின் கொழும்பு முகவர்களில் ஒருவரான லூசியன் ராஜகருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று பி. பி. ஸிக்கு மேலும் கூறுகையில், இந்த வகையில் முன்னாள் ஜனாதிபதியும் ஐ. தே. கவின் மூத்த தலைவர்களில் ஒருவருமான ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமைச்சர் தொண்டமானைச் சந்தித்து பேச்சு நடத்தியிருப்பதாகத் தெரிவித்தார்.

சிறுபான்மையினருக்கு எதிரான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கும் டி. பி. விஜேதுங்கவின் போக்கினாலேயே ஐ. தே. க தென்மாகாணத்தில் தோல்வியுற்றதாகக் கருதும் இவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் டி. பிக்கு பதிலாக ரணில் விக்கிரமசிங்கா நிறுத்தப்படுவதை ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஐ. தே. க. இழந்த ஆதரவை மீளப் பெறும் பொருட்டு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி மற்றும் மகன் ஆகியோரை கட்சியின் முன்னணி நிலைக்கு கொண்டு வருவது பற்றியும் ஐ. தே. க. யின் மூத்த தலைவர்கள் தீவிரமாக முயற்சித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

அமைச்சர் தொண்டமானை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மட்டுமன்றி ஐ. தே. க. வின் மூத்த தலைவர்கள் பலரும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'நரோமா' வியாழன் வரலாம்

நரோமா கப்பல் திருகோணமலையிலிருந்து புறப்பட்டு எதிர்வரும் வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதன்கிழமை மாலை திருமலை துறைமுகத்திலிருந்து புறப்படவுள்ள இக்கப்பலில் சிகிச்சை பெற்ற நோயாளர்களில் ஒரு தொகுதியினரும் அரசாங்க உத்தியோகஸ்தர் சிலரும் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை அன்றே இங்கிருந்து ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு திருகோணமலை நோக்கி புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (தி) (பா)

ஜனாதிபதிவேட்

மல்லிமாராய்ச்சி ஆகியோர் மேற்கொண்டு வருவதாகவும் இதே வேளை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக டி. பி. விஜேதுங்கா முன்னர் தெரிவு செய்யப்பட்டதாகவும் இம்முடிவை மாற்றுமாறு பல உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிய வருகின்றது.

# படகுகளின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்க

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் படகுகளின் உரிமையாளர்கள் தங்கள் படகுகளைத் தத்தம் பகுதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இச்சங்கங்கள் இல்லாத இடங்களைச் சேர்ந்த படகு உரிமையாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வருவாய்ப் பகுதியினருக்கும் நேரில் காண்பித்து தங்கள் உரிமையை உறுதிப்படுத்தி படகுகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இவர்கள் படகுகளை கிளாலி மற்றும் குஞ்சுப்பரந்தன் நல்லூர் பகுதிகளில் எதிர்வரும் 16,17, 18-ம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை பதிவு செய்து கொள்ளலாம்.

படகுகளின் பதிவை உறுதி பொறுப்பாளர்களிடம் கையளித்தால் மட்டுமே படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் பதிவு செய்யப்படாத படகுகள் கிளாலி-பூநகரி படகுச் சேவையில் ஈடுபட இசைவளிக்கப்பட மாட்டாது என யாழ்மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ரணில் திறந்த வீதியை உடுகம்பொல மூடினார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்த வீதியொன்று சில மணி நேரத்தின்பின் மூடப்பட்டது.

துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் இந்த வீதியை பிரதமர் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்த பின்னரும் சுங்க

பொல மூடும்படி பணித்ததை தொடர்ந்தே வீதி மூடப்பட்டது.

இவ் விவகாரம் துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பல் துறை அமைச்சர் அலிக் அலுவிகாரவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. சுங்க நடைமுறைக்கான ஒழுங்குகள் திறப்பு விழாவிற்

# THE KUNG FU KIDS

(COLOUR)

(கி-8993)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

# பொதுச்சபைக் கூட்டம்

### யாழ். மாவட்டம்

தனியார் கல்வி நிறுவன பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 06-04-94 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பொதுச் செயலாளர்**

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**

(கி-9007)

# பேணுநர்கள் தேவை

3 மாதம் தொடக்கம் 12 வயது வரையிலான குழந்தைகளைப் பேணுவதற்கு பேணுநர்கள் தேவை.

ஊதியமாக 2500/- வழங்கப்படும்.

குழந்தையின் வயதிற்கேற்ப கூடுதல் படிகள் வழங்கப்படும். வயதெல்லை 23 — 50 வரை.

உங்கள் விண்ணப்பங்களை 10-04-94 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும். கல்வித் தகைமைக்கேற்ப முன்னுரிமை வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:-

ஈழநாதம்
நல்லூர்,
யாழ்ப்பாணம்

செஞ்சோலை நிர்வாகத்தினர்

(7933)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ப்படுத்தி படகுப்பதிவாளர்களால் வழங்கப்பட்ட கடிதத்தை படகுச்சேவைப்

### பெரும்

முருகன்வீரர்கள் சிலர் நடக்க முடியாத நிலையில் மைதானத்தை விட்டு தூக்கி செல்லப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. செபஸ்தியாம்பிள்ளை கடமையாற்றினார்.

### ஜனாதிபதி

காட்டுகின்றனர்.

இந்நிலையில் சிறுபான்மையினரின் ஆதரவை மீண்டும் பெறக்கூடியவரான ஒருவட்கி வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என அவர்கள் வற்புறுத்துகின்றனர்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிற்பதற்கு டி. பி. விஜேதுங்கா தொடர்ந்தும் விரும்புவதாகவும் அதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இன்றும் நாளையும் கூடும் செயற்குழுக் கூட்டத்தில் இவ்விவகாரம் பெரும் விவகாரமாக வெடிக்கலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

### தொகுதிவாரி

களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்தப்படுவது பற்றியும் அதற்கான சட்டதிருத்தங்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. பிரபல சட்டத்தரணியும் அரசியலமைப்பு விவகார ராஜாங்க அமைச்சருமான ஜே.என். சொக்ஸி இந்த நடைமுறைக்கு அரசியலமைப்பு சட்டம் எதும் தேவையில்லை எனக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நடைமுறைகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லையெனக் கூறி முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபரும், துறைமுக அதிகார சபையின் பிரதித் தலைவருமான பிரேமதாச உடுகம

### சுவாங்களா

லைப் புலிகளின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வார். மாலை மூன்று மணிக்கு எழுத்தாளர், கலைஞர்களை யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் சந்தித்து கருத்துக்களை கேட்டறிவார்.

திரு. கோமல் சுவாமிநாதன் அனல்காற்று ஒர் இந்தியக்கனவு ஆகிய திரைப்படங்களின் கதாசிரியரும் இயக்குனரும் ஆவார். தண்ணீர் தண்ணீர் திரைப்படத்தின் கதாசிரியரும் இவரே ஆவார்.

ங்குகள் திறப்பு விழாவிற்கான திகதி தீர்மானிக்கப்பட்டதான ஒரு மாத காலத்தில் ஏன் மேற்கொள்ளப்படவில்லை எனக் கேள்வி எழுப்பிய அமைச்சர், வீதியை உடனடியாக பாவனைக்கு திறந்து விடும்படி பணிப்புரை விடுத்தார்.

### ஆறுபேர் பலி

பங்களாதேசில் கடும்காற்று மற்றும் மழை காரணமாக ஆறுபேர் உயிரிழந்துள்ளனர். சிட்டகொங் நகரில் மின்னல் ஏற்பட்டபோது அதில் தாக்கப்பட்டு நான்கு பேரும், சிட்டகொங் பகுதியில் மண்சரிவில் சிக்கி இரண்டு பேரும் உயிரிழந்தனர். இந்த வாரத்தில் மட்டும் சீரற்ற காலநிலைகள் காரணமாக பதினொன்பது பேர் உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### துன்பங்கள் மத்தியிலும்

உறுதிப்பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணமாக விளங்கினார்.

எமது இனத்தின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது. எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அடித்தளமானது. நீண்ட காலமாகவே, எமது கல்வி வாழ்வை சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.

சரிந்து கொண்டிருக்கும் எமது கல்வித்துறையை நிமிர்த்தி விடவேண்டும் என்ற இலக்கில் பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார். எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களாலும், அனர்த்தங்களாலும் யாழ்ப்பாண உயர்கல்வி பீடம் செயலிழந்து போகாத வண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப் பற்றிற்கும் மக்கள் நேயத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பேராசிரியர் துரைராசா ஒரு எளிமையான மனிதர். ஒரு இனிமையான மனிதர். எளிமையும் இனிமையும் இணைந்த ஒரு நல்ல மனிதர்.

அறிவின் அதியுயர்ந்த பண்பாக பிறப்பதுதான் எளிமை. தன்னடக்கமும், தற்பெருமையும் அற்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது. இந்த வகையில் பேராசிரியர் துரைராசா ஒரு அழகான மனிதர். அவரிடமுள்ள இந்த அகத்தின் அழகுதான் மக்களைக் கவரும் மாண்பாக விளங்குகிறது.

அவரது நற்பணி தொடரவேண்டும் என்றும், அவர் நல்வாழ்வு வாழவேண்டும் என்றும் நான் மனமார வாழ்த்துகிறேன்.

# மரண அறிவித்தல்கள்

## திரு. தம்பு சுப்பிரமணியம்

### (இளைப்பாறிய இலிகிதர்)

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த இளைப்பாறிய இலிகிதர் திரு. தம்பு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை 3 - 4 - 1994 அதிகாலை 4.00 மணியளவில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திருமதி சு. சின்னத்தங்கம் அவர்களின் அன்புக்கணவரும், சிவானந்தன் (சுவிஸ்), சிவயோகம், சிவராஜா (சுவிஸ்), சிவாஜினி, சிவகாந்தன் (ஆசிரியர்), சிவசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாலச்சந்திரன் (சுவிஸ்), சிரூபி (சுவிஸ்) கமலநாதன், இராஜகுமார் ஆகியோரின் அருமை மாமனாரும், தனுஷன், மதுரா, பிரசன்னா, தர்ஷிகா, தக்ஷலா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி. பா. சிவயோகம்
(மகள்)

பெரியரசடி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

(7935)

## கந்தையா சுப்பிரமணியம்

கீரிமலையை பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வதிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் 2-4-1994 சனிக்கிழமை கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி மாணிக்கம் அவர்களின் அன்புக் கணவரும், மார்க்கண்டு, ஈச்சம்மா ஆகியோரின் சகோதரரும், தேவன், ராதா, குட்டி, குமார், ரஞ்சன், பேபி, லிலிதா, கிலோனாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். இவர் விஜயன், இருபா, சியாமளா, நாகராஜா, தங்கம்மா ஆகியோரின் மாமனாரும் ஆவார். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குமார் (மகன்)
லக்கி புத்தகசாலை,
உரிமையாளர்.

தற்போதைய முகவரி:-
கீரிமலை றோட்,
சித்தன்கேணி.

(7934)